
# திருக்கோயில்







மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் சென்னை இணை ஆணையர் அலவலகக் கூட்ட அரங்கத்தில் 24.10.2002 அன்று நடைபெற்ற அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சி (64–வது அணி) நிறைவு விழாவில் கலந்துகொண்டு ‘‘இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆலய அறக்கட்டளை சட்ட விதிமுறைகள்’’ நூலை வெளியிட்டார்கள். இந்துசமய அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரி சங்கர், இ.ஆ.ப. அவர்கள் இந்நூலின் முதற் படியைப் பெற்றுச் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்து சமய அறநிலையத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் திருமிகு வி. பாண்டியன், இ.ஆ.ப. அவர்கள், கூடுதல் ஆணையர் திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி, பி.எல். அவர்கள், தலைமையிட இணை ஆணையர் திருமிகு த. சுந்தரம், பி.ஏ., பி.எல். அவர்கள், இணை ஆணையர் திருப்பணி ப. இராஜா, பி.எஸ்சி., பி.எல். அவர்கள், சென்னை இணை ஆணையர் திருமிகு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.ஸி., பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். தமிழ்நாடு நிர்வாக அதிகாரிகள் சங்கப் பொதுச் செயலாளர் திருமிகு சி. தர்மராஜ் அவர்கள் இந்நூலினைத் தொகுத்து வழங்கியிருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - ஐப்பசி நவம்பர் 2002 | மணி 11



சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

**காஞ்சி ஸ்ரீசொர்ணகாமாட்சி**

## பொருளடக்கம்


முதலாம் திருமுறை - முனைவர் த. அமிர்தலிங்கம்

வத்திராய்ப்பு அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில் 50ஆவது ஆண்டு பொன்விழா கலைவிழாவில் ஆற்றிய தலைமையுரை - திருமிகு வை. பழனிச்சாமி, இ.ஆ.ப. (ஓய்வு)

உயிருக்கு யார் உறவு? (நீதிக்கதை) - கலைமாமணி மா. இலட்சுமணன்

முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் திருநாவுக்கரசர் ஒலிநாடா மதிப்புரை — அ. நிறைமதி பி.எல்.

ஸ்ரீஐயப்ப வழிபாட்டில் பல தெய்வ வழிபாடுகள் - டாக்டர் டி. செல்வராஜ்

பித்தா பிறைசூடி பெருமானே! - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

அன்புக்கு எல்லை ஏது? - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

வேலும் மயிலும் துணை - இராமகிருஷ்ணன், மும்பை

தீபாவளி - மீனாட்சி கோகுலவாசன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# முதலாம் திருமுறை

**- முனைவர் த. அமிர்தலிங்கம்,** எம்.ஏ., பிஎச்.டி.,

''சீராரும் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனாம்
ஏராரும் இறைவனையும் எழிலாரும் நம்பியையும்
ஆராத அன்பினுடன் அடி பணிந்தங்கு அருள்விரவச்
சோராத காதல்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்''

**(திருமுறை கண்ட புராணம், 45)**

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் தாம் அருளிச் செய்த ''நம்பியாண்டார் நம்பி புராணம்'' என்னும், ''திருமுறை கண்ட புராணத்''தில், ''அலகில் புகழ் பெறு ராசராசமன்னன் அபயகுல சேகரனும்'', சைவம் வாழ மாமணிபோல் வந்து தோன்றிய நம்பி யாண்டார் நம்பியும், ''பத்தி தரும் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்'' என்று முதலில் திரு முறைகள் பதினொன்றாகத் தொகுக்கப்பட்ட அருள் வரலாற்றை எடுத்துக் கூறியுள்ளார்.

''திருத்தொண்டர் பதந் துதிப்பாம்'' என்ற திருமுறை கண்ட புராணத்தின் இறுதி அடிகளே ''திருத்தொண்டர் புராணம்'' என நம் சேக்கிழார் பெருமான் பாடியருளியுள்ள பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகப் பின்னர் போற்றிக் கொள்வதற்கு வழிகோலியிருத்தல் வேண்டும்.

இவ்வாறு வரன்முறை செய்யப்பட்டுள்ள பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறை களாகத் திருஞான சம்பந்தருடைய திருப்பதிகங்கள் வகுக்கப் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தருடைய முந்நூற்று எண்பத்து நான்கு திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டமையை

''மன்னுதமிழ் விரகர் எங்கள் காழிவேந்தர்
வகுத்தருளால் அமைத்த திருமுறை ஓர் மூன்றும்''

**(திருமுறை கண்டபுராணம், 24)**

''பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந் நூற்(று)
எண்பத்தி நான்கினால் இலங்குதிரு முறைமூன்று''

**(திருமுறை கண்ட புராணம், 25)**

எனவரும் தொடர்கள் தெரிவிக்கின்றன.

சமய குரவர் நால்வரில் அகவையால் சிறியவர் திருஞானசம்பந்தர்.

"அப்பருக்கெண் பத்தொன்று அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் தெய்வீகம் - இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா றறி.''

என்ற நேரிசை வெண்பா திருஞானசம்பந்தர் இப் பூவுலகில் பதினாறு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார் எனத் தெரிவிக்கின்றது.

''புண்ணிய பதினாறாண்டு பேர் பெறும்
புகலிவேந்தர்''

என்றே சேக்கிழாரும் பெரிய புராணத்தில் பாடுகின்றார்.

இவ்வாறு அகவையில் சிறியவராயும், திரு முறை பாடிய அருளாளர்களில் திருமூலர், காரைக்கால் அம்மையார் போன்ற அருளாளர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவராயும் விளங்கும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டமைக்குக் காரணம், அவர் தம் மூவாண் டில் உமாதேவியாரின் திருஞானத் தனங்கள் பொழிந்த ஞானப்பாலினை அம்மையே. பொற்கிண்ணத்தில் சுரந்து ஊட்ட அருந்திய அருந்தவப் பேற்றினை அவர் பெற்றமையாலேயே ஆகும்.

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய
மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்
அந்நிலையில்''

**(திருஞானசம்பந்தர் புராணம், 70)**

என்று அகவை மூன்றிலேயே அம்மையார் ஊட்ட ஞானப்பால் அருந்தி பரஞானம், அபரஞானம் யாவும் வரப்பெற்றார் சிவஞான சம்பந்தர் என்று மூவாண் டில் உலகுய்ய நிகழ்ந்த அற்புதத்தை விவரிக் கின்றார் சேக்கிழார் பெருமான்.



''யார் அளித்த பால் அடிசில் உண்டது நீ? எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு!'' என்று சிவபாத இருதயர் அதட்ட, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி ஒரு திரு கைவிரலால், விளங்கு மழவிடை மேல் உமாதேவியாருடன் வீற்றிருந்தருளும் தோணியப்பரைச் சுட்டிக் காட்டித் ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் மூவாண்டிலேயே பாடினார் என்றால் அத்தகைய ஞானக் குழந்தை நம் திருஞானசம்பந்தர் என்பதால்தான் அவருடைய திருமுறைகளுக்கு ஏற்றம்தந்து முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர்.

''பால்நாறும் பொன்மணி வாயினர்'', ''தெய்வ ஞானக்கன்று'', ''குறைவிலா நிறை ஞானக் கொண்டலார்'', ''பொங்கு கொங்கையிற் கறந்த மெய்ஞ்ஞான மாம் போனகம் பொற்குன்ற மங்கை செங்கையால் ஊட்ட உண்டருளிய மதலையார்'', ''ஞானமே முலை சுரந்தூட்ட பெற்ற பாலறாவாயர்'' ''அணைந்த மாமறை முதற்கலை அகிலமும் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகர்'' ''திசை விளங்கிடத் திருவருள் பெற்றவர்'' என்றெல்லாம் ஞானத்தின் திருவுருவாம் திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உண்டருளிய அற்புதத்தை ஆயிரக்கணக்கான பாடல்களில் பாடிப் பாடிப் பூரிக்கின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

4253 திருவிருத்தங்கள் கொண்டுவிளங்கும் பெரிய புராணத்தில், திருஞானசம்பந்தப் பெருமானுக்கு மட்டும் 1256 திருவிருத்தங்கள் சேக்கிழார் பெருமான் பாடியிருப்பது கொண்டு ''பிள்ளை பாதி, புராணம் பாதி'' என்றே பெரிய புராணத்தைச் சிறப்பிக்கின்றனர் சான்றோர்கள்.

''திசை அனைத்தின் பெருமைஎலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
மேதினியே நனிவெல்ல
அசைவில் செழுந்தமிழ் வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல''

திரு அவதாரம் புரிந்த சிவபெருக்கும் பிள்ளையார் என்பதால்தான் அவருடைய திருப்பதிகங்களுக்கு ஏற்றம் அளித்து முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர்.

திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களைப் பாடியுள்ள பண்களின் அடிப்படையில்தான் அவற்றை முதல் திருமுறை எனவும், இரண்டாம் திருமுறை எனவும், மூன்றாம் திருமுறை எனவும் வகைப் படுத்தியுள்ளனர்.

நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி என்னும் ஏழு பண்களுக்குரிய 135 திருப் பதிகங்களும், பண்ணில் அடங்காத

''யாழ்மூரிப் பதிகம்'' ஒன்றும் ஆக 136 திருப்பதிகங்கள் முதல் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறு பண்களுக்கு உரிய 122 திருப்பதிகங்கள் இரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி ஆகிய ஒன்பது பண்களுக்கு உரிய 125 திருப்பதிகங்கள் மூன்றாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

திருஞான சம்பந்தரின் முதல் திருமுறையில் முதல் திருப்பதிகமாக அமைந்து விளங்குவது, ஞானப்பால் உண்டு அவர் பாடிய ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் நட்டபாடை பண்ணில் அமைந்து விளங்கும் அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

தேயமெலாம் குலவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கௌண்டியர்தம் குலதீபமான திருஞான சம்பந்தர் வேத முதலான ஓங்காரத்துடன் ''தமிழ்'' என்பதில் அமைந்து விளங்கும் தகர ஒற்றினைச் சேர்த்து முதலாம் திருமுறையைத் ''தோ'' எனவே தொடங்குகின்றார். திருமுறைகள் இறைவனின் திருச்செவிக்கே அர்ப்பணம் அல்லவா! ஆகவவே திருச்செவியினைச் சிறப்பிக்கும் வகையில் தோடுடைய செவியன்'' எனவே தொடங்குகின்றார்.

''தோடுடைய செவியன்விடை ஏறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே.''

(திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை)

வேதங்களாலும் காணமுடியாத் பரம்பொருளைச் சுட்டிக்காட்டும் ஆற்றல் மிக்கவை தமிழ் மறைகளாம் திருமுறைகளே என்பதை இத் ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் வாயிலாக ஞாலத்திற்கு உணர்த்தி அருளுகின்றார் தமிழ்ஞான சம்பந்தர்.

''எல்லையிலா மறைமுதல் மெய் யுடன்எடுத்த
எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால் இம்மாநிலத்தோர்க்
குரைசிறப்ப
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச்
சிறப்பித்து''
''செம்மைபெற எடுத்ததிருத் ''தோடுடைய செவியன்''
எனும் மெய்ம்மைமொழித் திருப்பதிகம்
பிரமபுரம் மேவினார்
தம்மை அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு
''எம்மைஇது செய்தபிரான் இவனன்றே'' என
இசைத்தார்.''

(திருஞானசம்பந்தர் புராணம் - 75, 76)

இறைவரை அவருக்கு உரித்தான அடையாளங்களை எல்லாம் கூறி அடியார்கள் காணும் வண்ணம் செய்யத்தக்க ஆற்றல்மிக்கவை திருமுறைகள் என்பதைச் சேக்கிழார் பெருமான் தெளிவுபடுத்துகின்றார். திருமுறைகள் ஓதுவார், தொல்வினைகள் தீர்ந்து விடும் என்பதை

''ஒருநெறிய மனம்வைத்துணர்
ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர்
தொல்வினை தீர்தல் எளிதாமே''

எனவும் ''திருக்கடைக் காப்பினில் எடுத்து மொழிகின்றார் திருஞானசம்பந்தர்.

''பதிகம்'' என்பது ''பத்துப்பாடல்கள் கொண்டது'' எனப் பொருள்படும். திருஞானசம்பந்தர் தம் பதிகங்கள் பெரும்பாலும் பதினொரு பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. இப்பதினோராம் பாடல் பதிகத்தால் பெறலாகும் பயனைத் தொகுத்துக் கூறுவது ஆதலால் அதனைத் ''திருக்கடைக்காப்பு'' என்று வழங்குவர்.

''திருப்பதிகம் நிறைவித்துத்
திருக்கடைக் காப்புச் சாத்தி''

என்று சேக்கிழார் கூறுவதாலும், பெரும்பாலும் திருஞான சம்பந்தரின் பதிகங்கள் பதினோராவது ''திருக்கடைக் காப்புப்'' பாடலையும் கொண்டுவிளங்குவதாலும் திருஞான சம்பந்தர் தேவாரங்களுக்குத் ''திருக்கடைக் காப்பு'' என்பது சிறப்புப் பெயராகும். திருநாவுக்கரசர் தம் பாடல்களே, ''தேவாரம்'' எனச் சிறப்பிக்கப் பெறுகின்றன. சுந்தரர் பாடல்கள் ''திருப்பாட்டு'' எனச் சிறப்பிக்கப்பெறுகின்றன.

திருஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகங்களில் சில பன்னிரண்டு பாடல்களும் கொண்டு விளங்கு கின்றன. சீர்காழி திருத்தலத்திற்குப் பன்னிரண்டு திருப் பெயர்கள் உள. ஆகவே அத்தலத்தைப் பாடும் பதிகங்களில் சில பன்னிரண்டு பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன.

முதல் முறையில் அமைந்து விளங்கும் ''திரு வெழுகூற்றிருக்கை'' ஒரே ஆசிரியப்பாவால் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் பொது வாக ஒரு ஒருமைப்பாட்டினைக் கான முடியும். ஒவ் வொரு திருப்பதிகத்தின் எட்டாம் பாடல் சிவ பெருமான் இராவணனைத் தண்டித்த செயலைக் கூறுகின்றது. அதைப்போலவே ஒன்பதாம் திருப் பாடல் சிவபெருமான், பிரம்மா, திருமால் எனும் இருவருக்கும் காணுதற்கு அரியவனாய் நின்ற அருஞ் செயலையும், பத்தாம் பாடல் சமணர், புத்தர் முத லான புறசமயத்தாரைக் குறிப்பிட்டுப் பாடியதாக வும் அமைந்து விளங்குகின்றது.

இவ்வாறான ஒருமைப்பாடு விளங்க திரு ஞான சம்பந்தர் பாடியமைக்கான அருமைப்பாட்டி னைச் சேக்கிழார் பெருமான்

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும்
வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும்
எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணல் அவர்க்கருள் புரிந்த ஆக்கப்பாடருள்
செய்தார்''
''தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான்
எனத் தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மால்அயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த
படிவிரித்தார்''
''வேத காரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமேன மொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்''
(திருஞானம்பந்தர் புராணம் 77, 78, 79)

என நயமுற எடுத்துக் காட்டியுள்ளார்.

தாம்செய்த பிழை நினைந்து உருகுவார்க்கு அவர்தம் பிழையைப் பொறுத்து இறைவர் அருள் புரிதலையும், பாச, பசு ஞானங்களால் கண்டாற்கு அரியவனாக இறைவர் வீற்றிருத்தலையும், பொய்நீர் நெறிசேராமல் புன்னெறி பற்றினோர்க்கு இறையவர் அரியவர் ஆவதையும் திருஞானசம்பந்தரின் திரு முறைகள் பதிகந்தோறும் வலியுறுத்துவனவாக அமைந்து விளங்கும் சிறப்பினையும் நாம் உய்த் துணர்ந்து மகிழலாம்.

திருஞானசம்பந்தர் தம் முதலாம் திருமுறை யில் முதல் பதிகம் ஞானப்பால் உண்டு அம்மையப் பரைப் போற்றிப் பாடிய அற்புதத் திருப்பதிகம் என்பதை முன்னரே பார்த்தோம்.

முதலாம் திருமுறையில் இருபத்திமூன்றாம் திருப்பதிகம் திருக்கோலக்காவில் வீற்றிருந்தருளும் அருள்மிகு சத்தபுரிநாதர், ஞானக்குழந்தைக்குத் தம் அஞ்செழுத்து எழுதிய செம்பொற்றிருத்தாளம் வழங் கிய அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

திருக்கோலக்கா சென்று, அருள்மிகு ஓசை கொடுத்த நாயகி உடனுறை சத்தபுரிநாதரை ஆர்வ முடன் வணங்கி தக்கராகப் பண்ணில்

''மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பர் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ?''

என்று திருப்பாடலைப் பாடித் தம் திருக்கரங்களால் திருஞானசம்பந்தர் தாளமிடக் கையால் தாளமிட்டால் ஞானக்கன்றின் கைவருந்துமே என நினைந்துதம் திருவைந்தெழுத்து பொறிக்கப்பட்ட பொற்றாளத்தைத் திருஞானசம்பந்தரின் திருக்கரத்தில் வந்துசேரு மாறு திருவருள் புரிகின்றார் இறைவர்.

இதனைச் சேக்கிழார் பெருமான்,

''மைந்நிறைந்த மிடற்றானை
''மடையில்வா ளைகள்பாய்'' என்னும் வாக்கால்
கைந்நிறைந்த ஒத்தறுத்துக்
கலைப்பதிகம் கவுணியர் கோன் பாடுங்காலை''
''கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங்
கண்டருளிக் கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும்
எழுதியநற் செம்பொற்றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்தபா
டலுக்கிசைந்த அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர்
கைத்தலத்து வந்த தன்றே''

எனப் பாடியிருக்கக் காணலாம்.

இறைவர்தம் திருவருள் திறத்தைப் போற்றும் வகையில் திருஞானசம்பந்தர் பொற்றாளத்தை முழக்கி, தாம் தொடங்கிய இன்னிசை வண்டமிழ்ப் பதிகத்தை முழுதும் பாடித் திருக்கடைக்காப்பும் சாத்தியருள அத்திருப்பதிகத்தைக் கேட்டு அமரர்களும், தும்புரு, நாரதர் முதலான இசைஞானியரும் அப்பொற்றாளத் தின் அரிய நாதத்தைக் கேட்டு விம்மிதமுற்று அதிசயித் தார்கள் என்றும் சேக்கிழார் பெருமான் இவ்வதிசயப் பதிகத்தின் அற்புதத் திருவருளைப் பாடிப் போற்றிடக் காணுகின்றோம்

''நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே''

என்று திருஞானசம்பந்தரே திருக்கடைக்காப்பில் இப்பதிகப் பயனைக் கூறியிருப்பதைப் போல, ''மடையில் வாளைபாய'' என நாமும் பாட நம் கொடிய வினைகள் அகன்றிட, கொள்ளை இன்பம் குலவிட வாழ்வோம் என்பது திண்ணம்.

முதலாம் திருமுறையில் நாற்பத்தி நான்காம் பதிகம் ''துணிவளர் திங்கள்'' எனத் தொடங்கும் பிணிநீக்கும் அற்புதத் திருப்பதிகம் ஆகும். இப்பதிக மும் ''தக்கராகப்'' பண்ணிலேயே பாடப்பெற்றுள்ளது.

காவிரிபாயும் மழநாட்டில் விளங்குவது ''திருப் பாச்சிலாச்சிரமம்'' எனும் ஊர். இவ்வூரில் அரசோச்சிய வன் கொல்லி மழவன், சிறந்த சிவபக்தன். அவ னுடைய செல்வப் புதல்வியை முயலகன் எனும் கொடிய நோய் வாட்டியது. மணிமந்திர மருந்துகளால் அந்நோய் தீராததைக் கண்ட கொல்லி மழவன், ''இறை வன் விட்ட வழி'' என்பதாகத் தன் செல்வமகளைத் திருப்பாச்சிலாச்சிரமத் திருக்கோயிலில் சிவனார் முன் கிடத்தி வைத்தான்.

இந்நிலையில்தான் திருஞானசம்பந்தர் திருப் பாச்சிலாச்சிரமம் எழுந்தருளத் திருவிளக்கும். பூரண கும்பமும் வைத்து நகரை அலங்கரிக்கச் செய்து பாலறாவாயரைப் பணிந்து எதிர்கொள்கிறான் கொல்லி மழவன்.

திருப்பாச்சிலாச்சிரமத்து இறைவரை வணங் கிடச் சென்ற திருஞானசம்பந்தர், இறைவன் சந்நிதிக்கு முன்பாக உணர்வின்றிக் கிடக்கும் கன்னி இளங் கொடியைக் கண்டு ''யார் இவர்? என்ன நிகழ்ந்தது?'' என்று கேட்கின்றார்.

கொல்லி மழவனும் ''அடியேன் பெற்ற பொன் இவளை முயலகனாம் பொருவில் அரும்பிணி பொருந்தப் புனிதர் கோயில் முன் அணையக் கொணர் வித்தேன்.'' என நிகழ்ந்த துயரத்தைத் திருஞான சம்பந்தரிடம் எடுத்துக் கூறுகின்றான்.

அதனைக் கேட்ட நம் திருஞானசம்பந்தர் பிணி தீர்க்கும் அற்புதத் திருப்பதிகத்தைத் தக்கராகப் பண்ணில் பாடுகின்றார்.

''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வதோ இவர் மாண்பே''.

இப்பதிகம் பாடியதும் கொல்லி மழவன் பெற்ற குலக் கொழுந்து நோய் தீர்ந்து பொற்கொடி போல் எழுந்து நம் திருஞானசம்பந்தரின் திருவடி களைப் பணிந்து போற்றுகின்றார்.

சண்பைநாதர் ''மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ?'' எனக் கேட்டுப் பாடிய இப்பதிகத்தைச் சேக்கிழார் பெருமான்

''தணிவில் பிணிதவிர்க்கும் பதிகத் தண்டமிழ்''

(திருஞானசம்பந்தர் புராணம் 318)

என்று போற்றியிருப்பதனால் முதலாம் திருமுறை யில் அமைந்துவிளங்கும் ''துணிவளர் திங்கள்'' எனத் தொடங்கும் இவ்வற்புதத் திருப்பதிகம் பாட ''தீரா நோய் எல்லாம் தீர்தல் திண்ணமே.''

இனி, முதலாம் திருமுறையில் அமைந்து விளங்கும் 49-ஆவது பதிகம் ''போகமார்த்த பூண்முலை யாள்'' எனத் தொடங்கும் அற்புதத் திருப்பதிகம் ஆகும். இப்பதிகம் பழந்தக்கராகப் பண்ணில் அமைந்து விளங்குகின்றது.

திருஞானசம்பந்தர் பரசமயம் நிராகரித்து நீறாக்கத் திரு அவதாரம் புரிந்தவர்.

''அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம்
பாசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்
லூழிதொறும்

தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா
சரங்களெலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதா
ரம்செய்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 26)

என்று சேக்கிழார் திருஞானசம்பந்தர் தம் அவதார நோக்கத்தை விவரித்திருக்கக் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர் தம் அவதார நோக்கம் நிறைவேற்றிட மதுரையில் அமணர்களுக்கு எதிரான போராட்டத்தில் அனல் வாதம் செய்ய நேரிடுகின்றது.

''எங்கள் நாதனே பரம்பொருள்'' என்று கூறி அனலில் இட திருஞானசம்பந்தர் எடுத்த ஏடு ''போகமார்த்த பூண்முலையாள்'' எனத் தொடங்கும் திருநள்ளாற்றில் பாடிய திருப்பதிக ஏடு ஆகும்.

''இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்து
அட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையால்
அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியது அன்றே''

(திருஞானசம்பந்தர் புராணம், 786)

அனலில் இட்டும் எரிந்து சாம்பல் ஆகாமல் அம்மையின் திருமேனி வண்ணமாய்ப் பச்சையாய் திகழ்ந்த இத்திருப்பதிகம் ''பச்சைப் பதிகம்'' என்றே சிறப்பிக்கப்படும் அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

''போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும்
பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண
ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே''

என முதலாம் திருமுறையில் அமைந்து விளங்கும் இப்பச்சைப் பதிகத்தைப் பழந்தக்கராகப் பண்ணில் பாட ''வானவரோடு உலகில் உறைகின்ற'' பலனை நாம் பெறலாம்.

முதலாம் திருமுறையில் 54-ஆம் பதிகமாக அமைந்து விளங்குவது ஆண்பனையைப் பெண் பனை ஆக்கிய அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

தொண்டைநாட்டில் செய்யாற்றங்கரையில் உள்ளது திருஓத்தூர் திருத்தலம். தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் ஒத்து எனும் வேதம் வழங்கப்பட்ட திருத்தலம்.

ஆரணத்தின் உட்பொருளாய் நின்ற அருள் மிகு வேதநாதரைத் திருஞானசம்பந்தர் திருஓத்தூரில் வணங்கி மகிழ்ந்திருக்கும் வேளையில் சிவனடியார் ஒருவர் அவரைத் தொழுது அழுது வணங்கிக் கூறுகின்றார். ''அரனார் பொருட்டு அடியேன் வைத்து வளர்க்கும் பனைமரங்கள் யாவும், ஆண்பனையாகவே அமைந்து காய்ப்பது இல்லை. இது கண்டு சமணர்கள் அடியேனைப் பழித்து நகைக்கிறார்கள். இப்பழிச் சொல்லிலிருந்து என்னைக் காத்தருள வேண்டும்.''

சிவனடியாரின் குறை தீர வேண்டியும், பழித்த சமணர்கள் சிவபெருமான் திருவருள் திறத்தை நேரில் கண்டுணரும் வண்ணமும் திருஞானசம்பந்தர்

''பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே''

எனத் தொடங்கும் பதிகத்தைப் பழந்தக்கராகப் பண்ணில் பாட, ஆண்பனைகள் யாவும் பெண் பனைகளாகிப் பூத்துக் காய்த்துக் கனிகளை உதிர்த்து நின்ற அற்புதத்தை என்னென்பது?

இப்பதிகத்தின் ''திருக்கடைக்காப்பில்'' திருஞானசம்பந்தர்

''குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளை
பெரும்புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே''

என ஆண்பனைகள் காய்த்துக் குலுங்கிய அற்புதத்தைச் சுட்டிக்காட்டுகின்றார்.

திருஞானசம்பந்தர் ''மேகராகக் குறிஞ்சிப்'' பண்ணில் பாடியுள்ள ஏழு திருப்பதிகங்கள் ''மழை வழங்கும் வள்ளல் திருப்பதிகங்கள்'' எனப் போற்றப் படுகின்றன.

திருக்கழுமலம் திருப்பதிகம் ''சேவுயருந் திண் கொடியான் திருவடியே சரண்'' எனத் தொடங்குகின்றது.

திருவையாறு திருப்பதிகம் ''புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி'' எனத் தொடங்குகின்றது.

திருமுதுகுன்றம் திருப்பதிகம் ''மெய்த்தாறு சுவையுமே ழிசையும்'' எனத் தொடங்குகின்றது.

திருவீழிமிழலை திருப்பதிகம் ''ஏரிசையும் வடவாலின் கீழ்இருந்து'' எனத் தொடங்குகின்றது.

திருக்கச்சி ஏகம்பம் திருப்பதிகம்

''வெந்தவெண் பொடிப் பூசு மார்பின்''

எனத் தொடங்குகின்றது.

திருப்பறியலூர் வீரட்டம் திருப்பதிகம்

''கருத்தன் கடவுள் கனலேந்தி'' எனவும், திருப் பராய்த்துறை திருப்பதிகம் ''நீறுசேர்வதோர் மேனியர்'' எனவும் தொடங்குகின்றது.

மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ள இவ்வேழு திருப்பதிகங்களைப் பாட, வறட்சியான காலத்திலும் வான்மழை பொழிந்து வையம் தழைக்கும் என்பது கண்கண்ட உண்மையாகும். இப்பதிகங்கள் யாவும் முதலாம் திருமுறையில் அமைந்து விளங்குவது முதலாம் திருமுறைக்குள்ள சிறப்புக்களில் தலைமை யான ஒன்றாகும்.

முத்தமிழ் விரகராம் திருஞான்சம்பந்தர் ஏக பாதம், எழுகூற்றிருக்கை, இருக்குக் குறள் முதலான பல யாப்புப் புதுமைகளை வழங்கியுள்ள சிறப்பும் இம் முதலாம் திருமுறையில் நாம் கண்டு மகிழ் கின்றோம்.

தமிழுக்குத் திருஞானசம்பந்தர் வழங்கியுள்ள இத்தகைய யாப்புப் புதுமையைப் போற்றிச் சேக்கிழார் பெருமான்

''செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களான்
மொழிமாற்றும்
வந்தசொற்சீர் மாலைமாற்றும் வழிமொழி எல்லா
மடக்கும்
சந்தவியமகம் ஏகபாதம் தமிழ் இருக்குக் குறள்
சார்த்தி
எந்தைக் கெழு கூற்றிருக்கை ஈரடி ஈரடிவைப்பு''

''நாலடிமேல் வைப்பு மேன்மை நடையின்
முடுகும் இராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர் காழியாரைப் பாடினார் ஞானசம்பந்தர்''

(திருஞானசம்பந்தர் புராணம் 276, 277)

எனப் பாடியிருக்கக் காணுகின்றோம்.

திருவிருக்குக் குறள் எனும் யாப்பு அமைய, குறிஞ்சிப்பண்ணில் நம் தமிழாகரர் திருஞானசம்பந்தர் பாடியுள்ள ''வாசி தீரவே காசு நல்குவீர்'' எனத் தொடங்கும் திருப்பதிகம், இன்றும் மனமுருகிப் பாடி வேண்டுவார்க்கு நிதிவழங்கும் திருப்பதிகமாக விளங்குகின்றது.

திருவிழிமிழலையில் மழையின்மையால் பஞ்சம் உண்டாகியது. இதனைச் சேக்கிழார் பெருமான்

''மண்ணின் மிசை வான்பொய்த்து நதிகள்தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவுமாறி
விண்ணவர்க்கும் சிறப்பால் வரும் பூசையாற்றா
மிக்கபெரும் பசிஉலகில் விரவக் கண்டு''

(திருஞானசம்பந்தர் புராணம் 562)

என்று விவரிக்கின்றார். திருஞானசம்பந்தரும், திரு நாவுக்கரசுப் பெருமானும் சிவனடியார்களும் பஞ்சத் தினால் வாடநேர்ந்த கொடுமையை இறைவனிடம் முறையிட, இறைவரும் கனவில் தோன்றி

''வாட்டம் நீக்குதற்கு நித்தமோரோர் காசு நீடும்
இலகு மணிப்பீடத்துக் குணக்கும் மேற்கும்
யாமளித்தோம் உமக்கு''

என்று கூறியருளிக் கிழக்குப் பீடத்தில் திருஞான சம்பந்தருக்கு ஒரு பொற்காசும், மேற்குப் பீடத்தில் திருநாவுக்கரசருக்கு ஒரு பொற்காசும் வைத்து அருளு கின்றார்.

திருநாவுக்கரசருக்கு இறைவர் அளித்த காசு வாசியில்லாக் காசு. ஆகவே அவருடைய காசுக்கு உடனே பொருள் கிடைத்து அடியார்களுக்கு அமுதும் விரைவில் ஊட்டப்பெற்றது. திருஞானசம்பந்தருக்கு இறைவர் அளித்த காசு வாசியுடைய காசு, ஆகவே அவருடைய காசு மாறுவதற்குக் காலம் அதிகம் ஆனது; இதனால் அவருடைய மடத்தில் அடியவர் களுக்கு அமுது வழங்கவும் காலதாமதம் நேர்ந்தது.

திருநாவுக்கரசருக்கு வழங்குவதைப் போல் தமக்கும் வாசியில்லாக் காசு வழங்க வேண்டும் என்று திருவீழிமிழலை இறைவரிடம் திருஞான சம்பந்தர் முறையிட்டுப் பாடிய பதிகம்தான் ''வாசி தீரவே காசு நல்குவீர்'' என்ற திருப்பதிகம் ஆகும்.

''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே!''
''இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே!''

''செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே!''
''நீறு பூசினீர் ஏற தேறினீர்
கூறும் மிழலையீர் பேறும் அருளுமே!''

''காமன் வேவவோர் தூமக் கண்ணினீர்
நாமம் மிழலையீர் சேமம் நல்குமே''

எனத் திருஇருக்குக் குறள் எனும் யாப்பில் நம் திரு ஞானசம்பந்தர் திருவீழிமிழலை இறைவரிடம் முறை யிட்டுக் குறிஞ்சிப் பண்ணில் பாட, அவர் வேண்டிய வாறே நற்காசு தந்தருளினார் இறைவர் என்ற அற்புத வரலாற்றினைக் காணுகின்றோம். நிதி வேண்டும் அடியவர்க்கு நிதி நல்கும் அற்புதப் பதிகமாகத் திகழும் இப்பதிகம் முதலாம் திருமுறையில் 92-வது திருப் பதிகமாகத் திகழுகின்றது.

''வினையை வெல்ல முடியும்'' என்று திரு ஞானசம்பந்தர் வலியுறுத்திக் கூறும். ''திருநீல கண்டத்திருப்பதிகம்'' முதலாம் திருமுறையில் 116-ஆம் திருப்பதிகமாகத் திகழ்கின்றது.

''அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும்
அஃதறிவீர்!
உய்வினை நாடா திருப்பது உந்தமக்கு ஊனம்
அன்றே!
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுது
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு
நீலகண்டம்''

வியாழக் குறிஞ்சிப் பண்ணில் இப்பதிகத்தைப் பாடிப், பனிக்காலந்தோறும் குளிர்ச்சுரத்தில் வாடுவது தீர்க்கமுடியாத வினை என்று வாடியிருந்த திருக் கொடிமாடச் செங்குன்றூர் சிவனடியார்களுக்கு விதி யையும் சிவனருளால் வெல்லலாம் என்று திருஞான சம்பந்தர் அறிவுறுத்திய இவ்வற்புதத் திருநீலகண்டத் திருப்பதிகமும் முதலாம் திருமுறையில் அமைந்து விளங்குகின்றது.

திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகங்கள் அனைத்தும் ஓதிடும் பலனை வழங்கும் 'வியாழக் குறிஞ்சிப்'' பண்ணில் அமைந்த ''திருவெழுகூற் றிருக்கை''யும் முதலாம் திருமுறையில் அமைந்து விளங்குகின்றது.

''ஓருருவாயினை மானாங் காரத்து'' எனத் தொடங்கி
''நினைய வல்லவர் இல்லை நீணிலத்தே''

என முடியும் திருவெழுகூற்றிருக்கை 47 அடிகளால் ஆசிரியப்பாவில் பாடப்பெற்றுள்ளது. திருஞான சம்பந்தரே திருஎழுகூற்றிருக்கையை மூல இலக்கிய மாகத் தமிழ் மொழியில் பாடிய முதல்வர் என்று சேக்கிழார் பெருமான் போற்றியிருக்கின்றார்.

ஓரடியே பொருள் வேறுபாட்டுடன் நான்கு முறை மடித்து வந்து ஒரு பாடலாக அமையும் ''திரு ஏக பாதம்'' எனும் யாப்பிலும் நம் திருஞானசம்பந்தர் பாடியுள்ள ஒரு திருப்பதிகம் முதலாம் திருமுறையில் 127 ஆவது திருப்பதிகமாக அமைந்து விளங்குகின்றது.

''பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்''


என ஓரடியே நான்குமுறை திரும்பத்திரும்ப வரினும் ஒவ்வொரு அடியும் பொருளால் மாறுபட்டு வருவது உய்த்துணரத்தக்கது.

முதலாம் திருமுறையின் இறுதி 136 ஆவது திருப்பதிகமாக அமைந்து விளங்குவது ''யாழ்மூரி'' ஆகும்.

திருஞானசம்பந்தருடைய திருப்பதிகங்களை அவருடன் இருந்து யாழிலிட்டுப் பாடியவர் திரு நீலகண்டப் பெரும்பாணர். அவருடைய தாயார் பிறந்த ஊரான திருத்தருமபுரம் நம் திருஞானசம்பந்தர் சென்றபோது, திருநீலகண்டப் பெரும் பாணரின் சுற்றத்தார் வந்தெதிர்கொண்டு வணங்குகிறார்கள். அச்சுற்றத்தார் திருநீலகண்டப் பெரும்பாணர்பால் கொண்டிருந்த அன்பின் மிகுதியில் ''பிள்ளையார் பாடும் திருப்பதிகங்களை யாழில் நீர் இசைப்பதால் தான் அப்பதிகங்களுக்குச் சிறப்பு உண்டாகிறது'' எனப் பாராட்டிப் பேச, பாணரின் மனம் அதனைக் கேட்டு நடுங்கியது.'' திருப்பதிக இசை, அளவு இட்டு அறிய முடியாத பெருமை கொண்டது என்பதை அவனி உணரும் வண்ணம் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடி யருள வேண்டும்'' என்று திருநீலகண்ட யாழ்ப்பாணர், நம் திருஞானசம்பந்தரிடம் விண்ணப்பிக்கின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமானும்

''மாதர்மடப் பிடியும் மடவன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள்துணைஎன மகிழ்வர்
பூதவினப் படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமோ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்டிரை
யிரைந்நுரை கரை பொரு துவிம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே''



எனத் தொடங்கி நம் திருஞானசம்பந்தர் பாடப்பாட இப்பதிகம் யாழில் இசைத்துப் பாட முடியாத தன்மை பெற்றுத் திகழ்ந்தமையால் திருநீலகண்டயாழ்ப் பாணர் யாழினை உடைக்க முற்படலானார்.

திருஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப் பாணரின் செயலைத் தடுத்து, யாழைத் தம் கையிலே வாங்க ''ஐயரே! யாழினை உடைப்பதேன்? இறைவனும் இறைவியும் அருளிய அருட்டிறமெல்லாம் இக்கருவியிலே அமையாது; இயன்ற அளவு வாசித்தலே சால்பு'' என்று அவரைச் சமாதானப்படுத்தி யாழினை மீளவும் அவர் கையிலே கொடுத்தருள அவரும் அதனை வாங்கிச் சிரமேற்கொண்டபடியால் இத்திருப்பதிகம் ''யாழ்மூரிப்பதிகம்'' என்றே வழங்குகின்ற சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

''சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை - இறைவன் பெருமை'' என்பதையே முதலாம் திருமுறையில் அமைந்து விளங்கும் யாழ்மூரித் திருப்பதிகம் நமக்கு உணர்த்துகின்றது.

''ஆறதே றுஞ்சடை யான்அருள் மேவ அவனியார்க்கு
வீறதே றுந்தமி ழால் வழிகண்டவன் மென்கிளிமாந்
தேறல் கோதித் தூறுசண்பகர் தாவிச் செழுங்கமுகின்
தாறதேறும் பொழிற் சண்பையர் காவலன்
சம்பந்தனே''

என்று நம்பியாண்டார் நம்பி வீறதேறும் தமிழால் வழி கண்ட திருஞானசம்பந்தர் தம் திருப்புகழைப் போற்றுகின்றார்.

''பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்''

(ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை)

அத்தகைய திருஞானசம்பந்தர் தம் ஞானத் தமிழாம் முதல் திருமுறையை ஓதி நாம் ''மன்னு சோதி ஈசனோடே மன்னி இருப்போமாக.''

திருச்சிற்றம்பலம்

★ ★ ★

# வத்திராயிருப்பு அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில் 50–வது ஆண்டு பொன்விழா – கலை விழாவில் ஆற்றிய தலைமையுரை

– **திருமிகு வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,** (ஓய்வு) அவர்கள்
தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர், சென்னை.

'அம்பிகையைச் சரண் அடைந்தால்
அதிக வரம் பெறலாம்'

என்று மகாகவி பாரதியார் பாடியுள்ளார்.

அம்பிகையை மக்கள் எல்லோரும் கொண்டாடும் ஒப்பற்ற விழா நவராத்திரி விழாவாகும்.

இந்த நவராத்திரி விழா கலைவிழாவாக இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதிலும் புகழ்பெற்ற நம் முத்தாலம்மன் திருக்கோயிலில் 50வது ஆண்டு பொன்விழாவாக இன்று கொண்டாடப்பெறும் கலைவிழாவில் கலந்து கொண்டு தலைமை ஏற்று உங்களிடையே உரை ஆற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய இந்து சமயத்தினை ஆறு உட்பிரிவு களாக சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்று வகைப்படுத்துகின்றனர்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் சைவம்.

திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம்.

கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்யம்.

குமரனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் கௌமாரம்.

சூரியனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் சௌரம்.

சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் சாக்தம்.

இந்த ஆறும் இணைந்தது தான் ஒப்பற்ற நம் இந்து சமயம்.

சமயங்கள் ஆறினுக்கும் தலைவியாக இருக்கும் ஆதிபராசக்தியைக் கொண்டாடும் ஒப்பற்ற ஒரு பெரும் விழா தான் இந்த நவராத்திரி விழாவாகும்.

'பூத்தவளே! புவனம் பதி
நான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே!
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா
முகுந்தற்கு இறையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்
றோர் தெய்வம் வந்திப்பதே!'

என்று 'அபிராமி அந்தாதி'யில் ஈரேழு உலகங்களையும்

படைப்பவள்
காப்பவள்
மறைப்பவள்!
சிவபெருமானுக்கும், திருமாலுக்கும்
பெரியவள்

பராசக்தி தான் என்று அபிராமி பட்டர் பராசக்தியைப் போற்றித் துதிப்பதைக் காணுகிறோம்.

மகிடன் என்ற அரக்கன் - எருமைத்தலை கொண்டவன் - அவனை சிவபெருமானாலும், திருமாலும், பிரம்மாவாலும் வெற்றி கொள்ள முடிய வில்லை.

ஆதிமும்மூர்த்திகள் என்று வையம் கொண்டாடும் சிவபெருமான், திருமால், பிரம்மா மூவருமே மகிடனை வெல்ல முடியாமல் 'அம்மா! பராசக்தி! நீதான் வந்து இந்த அரக்கனை வதைத்து எங்களை வாழ்விக்க வேண்டும் என்று துதி செய்தபோது

ஒரு மகாளய அமாவாசையன்று சிம்ம வாகனத்தில் ஆதி பராசக்தி அவதாரம் செய்து, எட்டு நாட்கள் மகிஷனுடன் யுத்தம் செய்து, அட்டமி - நவமி கூடும் வேளையில் அவன் எருமைத்தலை மீது தன் திருப்பாதம் வைத்து அவனை அடக்கி ஆளப்



பார்த்தாள். மகிடன் அப்போதும் அடங்காமல் போகவே அவனை சம்ஹாரம் செய்து, ''மகிஷாசுர மர்த்தினி'' ஆனாள். ஆதிபராசக்தியின் வெற்றியைக் கொண்டாடும் தசமி நாளே விஜயதசமி என்று நமக்கு நவராத்திரி விழா கொண்டாடப்படும் வரலாறு புராணங்களில் விவரித்துக் கூறப்படுகின்றது.

'அரணம் பொருள் என்று அருள் ஒன்று
இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த
பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற
நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும்
எய்தார் இந்த வையகத்தே''

என்ற ''அபிராமி அந்தாதி''ப் பாடலில் அபிராமி பட்டர், திரிபுரங்களை எரித்த ஆற்றல் படைத்தவரான சிவபெருமானும், திருமாலும் கூட மகிடனை வெல்வதற்கு ஆற்றல் இல்லாமல் ''அம்மா பராசக்தி!' நீ வந்து மகிடனை வந்து வதைத்துக் காக்க வேண்டும்'' என்று வேண்டி நின்றதை எடுத்துரைக்கின்றார்.

மகிஷனை வதைத்தழித்த வீரச் செயலை இன்னுமொரு பாடலில்

'சுந்தரி எந்தைத் துணைவி என்
பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி
னாய்! மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத
கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள்
என் கருத்தனவே''

என்று பாடுகின்றார் அபிராமி பட்டர்.

மகிடன் தலை பராசக்தியின் திருப்பாதத்தின் கீழே உள்ளது. பிரம்மகபாலம் பராசக்தியின் திருக்கரத்தில் உள்ளது.

ஆணவம் கொண்ட அரக்கசக்தியாவும் பராசக்தியின் முன் பஞ்சுபஞ்சாய் பறந்து போகும் என்பதையும், அகங்காரம் கொள்பவர் யாராயினும், அவர் அறிவற்ற அகங்காரத்தலையும் அன்னை பராசக்தியின் திருக்கரங்களில் தொங்கும் என்பதையும் அபிராமி பட்டர் இப்பாடலில் நமக்கு எடுத்துக் கூறி, ஆணவம், அகங்காரம் இரண்டும் அறவே கூடாது என்று வற்புறுத்துகின்றார்.

நவராத்திரியில் எல்லோரும் வீடுகளில் கொலு வைப்பார்கள். அதிலே எல்லா உயிர் வகைகளும் இடம் பெற்றிருக்கும். ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்களும் கொலுவை அலங்கரிக்கும்.

மேற்படியிலே பராசக்தி ஒப்பற்ற இராஜ ராஜேஸ்வரி நம் முத்தாலம்மன் - அனைத்துப் படிகளுக்கும்

மேலே - முதற்படியிலே வீற்றிருந்து அருள்பாலிப் பாள்.

மற்றமற்ற தெய்வங்கள் எல்லாம் கூட கீழ்ப் படிகளைத் தான் அலங்கரிப்பார்கள்.

அன்றைக்கு மகிடனை வெல்ல முடியாமல் தேவாதி தேவர்கள் எல்லாம் பொம்மைகள் போல செயலற்று நின்று விட்டார்கள்.

சிவபெருமான் கையிலே சூலம் இருந்தும், திருமால் கையிலே சக்கரம் இருந்தும், மற்ற மற்ற தேவர்கள் கையில் ஆயுதங்கள் பல இருந்தும் அவற்றைக் கொண்டு மகிடனை சம்ஹாரம் செய்ய அவர்களால் இயலவில்லை.

''அம்மா ஆதி பராசக்தி!'' நீயே எல்லாமாக இருக் கிறாய்! நீ ஆட்டுவித்தால் தான் நாங்கள் ஆட முடியும். இயங்க முடியும்!.

''நாங்கள் வெறும் பொம்மைகள்
நீ ஆட்டுவிக்கும் மகாசக்தி''

என்று தேவர்கள் எல்லாம் பராசக்தியின் மகிமையை உணர்ந்து கொண்டாடிய விழா, ஆகவே தான் நவராத்திரியிலே கொலு வைத்து

'அண்டங்களுக்கு எல்லாம்
ஆதிபராசக்தியே அனைத்துமாக உள்ளாள்'

என்று உணர்ந்து போற்றுகின்ற ஒரு பெரும் விழா தான் இந்த நவராத்திரி விழாவாகும்.

தேவாதி தேவர்கள் எல்லாம் பரம்பொருளாகிய பராசக்தியின் முன்னால் வெறும் பொம்மைகள் என் றால், மனிதர்கள் ஆகிய நாமெல்லாமும் பொம்மைகள் தான். இதனை உணர்த்துவது தான் நவராத்திரி விழா.

அவள் மழையாகப் பொழிந்தால் தான் வையம் தழைக்கும் ஆகவே தான் மாரியம்மா என்று பரா சக்தியை போற்றுகின்றோம்.

இன்றைக்கு வையம் தழைக்க வேண்டும் என் றால், வானம் மழை பொழிய வேண்டும் என்றால் நவராத்திரி விழாவைச் சிறப்புறக் கொண்டாட வேண்டும்.

திருவெம்பாவையிலே மாணிக்கவாசகர் பராசக்தி யின் திருவருளே போல் மழை பெய்ய வேண்டும் என்று பாடுகிறார். அம்பிகையின் சிற்றிடை போல மின்னல் மின்னி, அம்பிகையின் சிலம்பினைப் போல இடி இடித்து அம்பிகையின் திருப்புருவம் போல வான வில்லும் தோன்றி, அம்பிகை அடியார்க்கு சுரக்கின்ற திருவருளே போல, மழை பெய்ய வேண்டும் என்று மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலே அம்பிகை யின் திருவருள் இருந்தால் தான் மழை பொழியும் என்று பாடியிருக்கின்ற சிறப்பைக் காணுகின்றோம்.

அந்தப் பாடல் பின்வருமாறு ...

''முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற்பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்''

இத்தகைய ''மழையைப் பொழிந்து இந்த மாநிலத்தை மகாமாரியம்மன் - முத்தாலம்மன் தழைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் தான் இந்த நவராத்திரி விழாவை நாம் சிறப்புறக் கொண்டாடு கின்றோம்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்கள் துர்க்கை யைக் கொண்டாடுகின்றோம். நல்ல உடல் நலம் தருபவள் துர்க்கை.

நவராத்திரியின் அடுத்த மூன்று நாட்கள் லட்சுமி யைக் கொண்டாடுகின்றோம். வாழ்க்கைக்குத் தேவை யான செல்வத்தைத் தருபவள் லட்சுமி.

நவராத்திரியின் இறுதி மூன்று நாட்கள் சரசுவதி யைக் கொண்டாடுகின்றோம். வாழ்க்கை சிறப்பதற்குத் தேவையான அறிவினைத் தருபவள் சரசுவதி.

உடல் நலம், பொருள்வளம், கல்வி நலம் இவை மூன்றும் நம் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகள்.

இம்மூன்றையும் தருகின்ற முப்பெரும் தேவியர் துர்க்கை, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவர். இப்பெரும் தேவியரும் இணைந்த ஒரு பெரும் சக்தியே ஆதி பராசக்தி.

''தனந்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில்
வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே''

அம்பிகையின் கடைக்கண் பார்வை நம்மேல் பட்டாலே நமக்கு செல்வம், கல்வி, நல்ல உடல்நலம் யாவும் கிடைக்கும் என்று அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் பாடியிருக்கக் காணுகின்றோம்.

''பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க'' என்று பெரியவர்கள் நம்மை வாழ்த்துவார்கள். பதினாறு என்பது வாழ்விலே ஒவ்வொருவரும் பெற வேண்டிய பதினாறு பேறுகள்.

| | |
|---|---|
| *1. நோயின்மை* | *9. அறிவு* |
| *2. கல்வி* | *10. சந்தானம்* |
| *3. தனம்* | *11. வலிமை* |
| *4. தானியம்* | *12. துணிவு* |
| *5. அழகு* | *13. வாழ்நாள்* |
| *6. புகழ்* | *14. வெற்றி* |
| *7. பெருமை* | *15. நல்லூழ்* |
| *8. இளமை* | *16. நுகர்ச்சி* |

என்று இப்பதினாறு பேறுகளை வகைப்படுத்திக் கூறும் அபிராமி பட்டர். இப்பதினாறு பேறுகளையும் ஒரு சேர வழங்கும் ஆற்றல் ஆதிபராசக்திக்கே உண்டு என்று அழகும் இயம்புகின்ற அற்புதப் பாடல் இது.

''சகல செல்வங்களும் தரும் இமய
கிரிராச தனயை மாதேவி உன்னை
சத்யமாய் நித்தியம் உள்ளத்தில்
துதிக்கும் உத்தமர் தமக்கு இரங்கி மிகவும்
அகிலமிதில் நோயின்மை கல்வி
தனம்தான்யம் அழகு புகழ் பெருமை
இளமை அறிவு சந்தானம்
வலி துணிவு வாழ்நாள் வெற்றி ஆகுநல்லூழ்
நுகர்ச்சி
தொகைதரு பதினாறு பேறும்
தந்தருளி சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தகுண சாலி பரிபாலி அனுகூலி
திரிசூலி மங்கலவிசாலி மகவுநான் நீ தாய்
அளித்தருள்வாய்
மகிமை வளர் திருக்கடவூரில் வாழ் வாமி
சுபநேமி புகழ்நாமி சிவசாமி மகிழ்
அபிராமி உமையே!'' வாமி

என்று பதினாறு பேறுகளும் தருபவள் ஆதி பராசக்தியே என்று தெளிவுபடுத்தியிருக்கக் காணுகின்றோம்.

நாம் வாழ்வின் பதினாறு பேறுகளும் பெற நவராத்திரி விழாவைச் சிறப்புறக் கொண்டாட வேண்டும்.

''அம்பிகையைச் சரண் அடைந்தால்
அதிக வரம் பெறலாம்''

என்று அதிக வரம் தருபவள் அம்பிகைதான் என்று அழுத்தம் திருத்தமாக மகாகவி பாரதியார் பாடியுள்ளார்.

''பால் நினைந்தூட்டும் தாய்'' என்றே இறைவனைத் தாயோடு ஒப்பிட்டுப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

ஆகவே கருணை அதிகமுள்ள தாயிடத்தில் நாம் கைநீட்டினால் அவள் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பாள். தாயின் கருணைக்கு எல்லை கிடையாது.

ஒரு துறவி காட்டிலே தவம் செய்து கொண்டிருக்கிறார். அவர் முன் தேவி பராசக்தி தோன்றி ''பக்தனே! இன்று முதல் நீ தொட்டதெல்லாம் துலங்கும், மண்ணைத் தொட்டாலும் பொன் ஆகும். வரம் தந்தேன்'' என்று வரம் தருகிறாள்.

அந்தத் துறவிக்கு அம்பிகையின் வரத்தைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. காட்டை விட்டு நாட்டிற்கு வருகிறார்.

ஊருக்குள் வந்து அரண்மனைக்கு வருகிறார். ராஜ்ஜிய மண்டபத்தில் மந்திரிகள், சேனாபதிகள் புடைசூழ அரசர் உயர்ந்த அரியாசனத்தில் அமர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார்.

காட்டில் இருந்து வந்த துறவி, நேராக காவலர்களை எல்லாம் மீறிக் கொண்டு போய் அரசர் முன் நிற்கிறார்; அரசர் தலையில் அணிந்துள்ள மணி மகுடத்தைத் தன் கையினாலே தட்டி விடுகிறார்.

''ஒரு துறவி! அரசரின் மணிமகுடத்தைத் தட்டி விடுவதா? என்ன துணிச்சல்! இவருடைய தலையை வெட்ட வேண்டும்'' என்று சேனாபதி சீறிப் பாய்கிறார்.

'மண்ணைத் தொட்டாலும் பொன் ஆகும் என்றாளே! பராசக்தி.'

இப்போது பார்ப்போம் அவள் சக்தியை''

என்று துறவியோ தம் உள்ளூர நகைத்துக் கொள்கிறார்.

மன்னனின் மணிமகுடம் தரையில் உருண்டு ஓடுகிறது. அந்த மகுடத்திற்குள்ளே இருந்து ஒரு நாகம் சீறிக் கொண்டு வெளியே ஓடுகிறது.

மன்னன் பார்க்கிறான்!'' ஆஹா! இவர் அல்லவா மகாமுனிவர். கடவுள்; என் மகுடத்திற்குள்ளே நாகம் இருக்கிறது. அது கடித்தால் நான் செத்து விடுவேன் என்று ஞானப்பார்வையால் உணர்ந்து, என்னைக் காப்பதற்காகக் காட்டிலே இருந்து வந்திருக்கிறார்!''

என்று சொல்லி மன்னன் துறவியின் பாதங்களிலே விழுந்து வணங்குகின்றான். மன்னன் வணங்க, அரசி உள்ளிட்ட எல்லோரும் வணங்குகிறார்கள்.

இது தான் அம்பிகையின் திருவருள்!

அம்பிகை ஒரு கண நேரத்திலே ஒப்பற்ற அதி சயத்தை உண்டாக்கி விட்டாள்!

அன்று ''அமாவாசை''யைப் பௌர்ணமி என்று வாய் தவறுதலாக அபிராமி பட்டர் கூறிவிட, தன் பக்தன் வாக்கை மெய்யாக்கத் தன் காது தோட்டினைக் கழற்றி வானத்திலே வீசுகிறாள். அது முழுநிலவாக ஒளி வீசி அமாவாசையைப் பௌர்ணமி ஆக்கி விட்டது என்ற அதிசய வரலாற்றினைப் பார்க்கிறோம்.

அப்படிப்பட்ட அம்பிகையின் திருவருளைக் குறைவின்றி நாம் பெறக் கொண்டாடும் ஒப்பற்ற ஒரு விழா தான் நவராத்திரிப் பெருவிழாவாகும்.

''நாயகி நான்முகி நாராயணி
கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள்
சரணம் அரண் நமக்கே''.

என்று அபிராமி பட்டர் சிவசக்தியை நாயகி என்றும், பிரம்ம சக்தியை நான்முகி என்றும், திருமால் சக்தியை நாராயணி என்றும் - சகல சக்திகளும் இணைந்த ஒரு பெரும் சக்தியே ஆதிபராசக்தி என்றும் தெளிவுபடுத்துகின்றார். பெண்மையைப் போற்றும் ஒரு பெரு விழா நவராத்திரி விழா என் பதும் இவ்விழாவிற்கு உள்ள தனிச்சிறப்பாகும்.

''கடவுள் இல்லை'' என்று நாத்திக வாதம் பேசு கிறவர்கள் கூட ''ஒரு சக்தி இருக்கிறது'' என்று ஒத்துக் கொள்வதைப் பார்க்கிறோம்.

அந்த ஒரு சக்தி தான் - உலகத்தை - அண்டங்களை ஆட்டிப் படைக்கிற ஒரு அற்புத சக்தி தான் ஆதி பராசக்தி. அந்த ஆதி பராசக்தியை நவராத்திரி விழா விலே மகிழ்ந்து நாம் கொண்டாடுகின்றோம்.

''ஐயன் அளந்த இரு நாழி நெல் கொண்டு முப்பத்தி ரண்டு அறம் வளர்த்தாள் அம்பிகை'' என்று காஞ்சி புராணம் கூறுகின்றது.

இன்றைக்கு நவராத்திரி விழா கோயில்களில் நடைபெறுகிறது என்றால் நாளும் அறம் வளர்கின்றது என்பது தான் பொருள்.

இன்றைக்குத் திருக்கோயில்களில் எல்லாம் தினம் தினமும் அன்னதானம் வழங்கப்படுகின்றது.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''

என்று நம்முடைய இலக்கியங்கள் அன்ன தானத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

''யாவர்க்குமாம் உண்ணும் போது
ஒரு கைப்பிடி'' என்கிறார் திருமூலர்.

''பசித்தோர் முகம்பார்''
என்கின்றார் பட்டினத்தார்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்''

என்கின்றார் அருட்பிரகாச வள்ளலார்.

இப்படி அனைத்து அருளாளர்களும் வலியுறுத்திச் சொல்லும் ஒரு பெரும் அறம் தான் அன்னதானம்.

அந்த அன்னதானத்திற்கு நிகரான தானமே இல்லை. இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு 144 திருக்கோயில்களில் தினந்தோறும் பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கி, இன்றைக்குத் திருக்கோயில்கள் தோறும் அறம் வளர்த்து வருகிறது என்றால் அந்த அறம் வளர் நாயகி தான் இன்றைக்கு நவராத்திரி நாயகியாக விளங்கும் நம் ஆதிபராசக்தி.

''ஐயன் அளந்த படி இரு
நாழி கொண்டு அண்டம் எல்லாம்
உய்ய அறம் செய்யும் உன்னையும்
போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை
யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இது
வோ உன்றன் மெய்யருளே''

என்ற அபிராமி அந்தாதிப் பாடலில் பராசக்தி-யாகிய தெய்வத்தைப் பணிவோர் வேறு யாரையும் பணிய தேவையில்லை என்று பாடியிருக்கிறார் அபிராமி பட்டர்.

அத்தகைய பராசக்தியைக் கொண்டாடும் இந்த ஒப்பற்ற நவராத்திரி பொன்விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த மெய்யன்பர்கள் எல்லோர்க்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து

''ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூநிறத்
தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்
குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு
வாக்கு ஒரு தீங்கில்லையே''

என்று பராசக்தியை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

# உயிருக்கு யார் உறவு?

- கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

வெம்பும் உயிருக்கு ஓர் உறவாய்
வேளை நமனும் வருவானோ?
தம்பி தமயன் துணையாமோ?
தனயர் மனைவி வருவாரோ?
உம்பர் பரவும் திருத்தணிகை
உயர் மாமலைமேல் இருப்பவர்க்கு
தும்பக் குடலை எடுக்காமல்
துக்க உடலை எடுத்தேனே!

- திருவருட்பா

இந்த உடம்புக்குத்தான் தாய் - தந்தை - அண்ணன் தம்பி - அக்கா - தங்கை இப்படிப்பட்ட உறவுகள் உண்டு - உயிருக்கு உறவு காலன் ஒருவன் தான் என்கிறார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்:

அதனால்தான் வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ எனப் பாடி வைத்தார்களோ!

பத்துமாதம் தாய் வயிற்றிலே குடியிருந்து விட்டு - பூமிக்கு வந்ததும் குழந்தை அழும் ஓசை கேட்டு பெற்றவளும் மற்றவரும் மகிழ்கின்றனர் - அழ வில்லை என்றால் பிறந்த குழந்தை ஊமையோ என்ற அச்சத்தினால் அனைவரும் கலங்குகின்றனர் - சிரித்தபடி எந்தக் குழந்தையும் பூமிக்கு வந்த தில்லை!....

பூமிக்கு வந்ததிலே அந்த ஜீவனுக்குத்தான் எத்தனை எத்தனை வேதனை? ஒன்றும் அறியாத அந்தப் பச்சை மண் எவ்வாறு அதை உணர்ந் திருந்தது...?

இறைவனின் சிருஷ்டியில்தான் எத்தனை விசித்ரங்கள்?

வாழ்க்கையை நாம் பற்றிக்கொள்கிறோமா? இல்லை நம்மை வாழ்க்கை பற்றிக் கொள்கிறதா? விளங்க முடியாத புதிர்.

இதுபற்றி ஒரு தத்துவக் கதை சொல்லப்பட் டிருக்கிறது - அதைத்தான் என்னவென்று பார்ப்போமே!

வைர வியாபாரி பூரண லிங்கத்தின் கடை அந்த வட்டாரத்திலே மிகவும் பிரபல்யமானது - பாரம் பரியமாக வைர வியாபாரம்! மூன்று தலைமுறைப் பெரியவர்களின் போட்டோக்கள் மாட்டப்பட்டு - பூஜிக்கப்பட்டு வருகிறது - இங்கே வைரம் வாங்கி னால் மிகவும் ராசி என்று கூறுவார்கள் - முதலாளி பூரணலிங்கம் நடுத்தர வயது உடையவர்தான் - எல்லோ ரிடமும் இனிமையாகப் பழகும் சுபாவம் உள்ளவர்: திருமண சீஸன் ஆரம்பமாகிவிட்டால் போதும் - வியாபாரம் களைகட்டத் தொடங்கிவிடும் - காலுக்கு மெட்டி முதலாக நெற்றிச் சுட்டிவரை எல்லா வித மான நகைகளும் இவரது கடையில் கிடைக்கும் - எல்லா அளவுகளிலும் - எல்லா எடைகளிலும் கிடைக் கும் என்பதால் சுபகாரியங்களுக்காக நகைகள் வாங்க வருபவர்கள் நம்பி வருவார்கள். பூரணலிங்கம் என் றால் நம்பிக்கையான மறுபெயர் எனப் பெயர் வாங்கி விட்டதால் வியாபாரம் அமோகம்!...

''அடேய் பூரணலிங்கம்! சௌக்யமா?'' என்று ஒரு குரல்...

பூரண லிங்கத்தைப் பெயர் சொல்லி அழைப்ப வர் அந்த வட்டாரத்தில் யாருமில்லை.... தூரத்தே காவி யுடையணிந்த சந்நியாசி ஒருவர் சிரித்தபடி - என்னை உனக்கு நினைவில்லையா? எப்படி நினைவிருக்கும் - இருபது ஆண்டுகளுக்கு முன்னே சந்தித்தோம் - என் பெயர் சாம்பசிவம் - இருவரும் ஒன்றாகப் படித்தோம். ஆடினோம் ஓடினோம் விளையாடினோம் - பக்கத்திலே உள்ள தோட்டத்திலே மாங்காய் அடிப்போம் - தோட்டக் காரன் விரட்டுவான் - எத்தனை மகிழ்ச்சியான காலம் அது...?

பூரணலிங்கம் எழுந்துவந்து சாம்பசிவத்தை கட்டிப்பிடித்துக் கொண்டார். இந்த நிலைக்கு நீ தாழ்ந்து போவாய் என நான் எண்ணிப் பார்க்கவேயில்லை எனக் கண் கலங்கினான் - ''தாழ்ந்து போனேனா? உன்னை விட வாழ்க்கையில் நான் தான் உயர்ந்து நிற்கிறேன்! நிம்மதியாக மகிழ்ச்சியாக சுதந்திர புருஷ னாக இருக்கிறேன்.... நீதான் தங்கக் கூண்டிலே வாழும் கிளியாக அல்லல் படுகிறாய்.... உனக்கிருக்கும் சொத்துக் களை - இத்தனை ஏக்கர் - இத்தனை கோடி என்று

கணக்குப் போடலாம். என்னுடைய சொத்துக்கள் அப்படி இல்லை - இந்த உலகமே எனக்கு சொந்தம் - வேண்டாம் இந்தப் போலி நரக வாழ்க்கை எல்லா வற்றையும் தூக்கி எறிந்து விட்டு வந்து விடு என்னோடு - என்றான் சாம்பசிவம்!

துறவு வாழ்க்கையினால் ஏற்பட்ட விரக்தியினால் நண்பன் இப்படிப் பேசுகிறான் என எண்ணிய பூரணலிங்கம் - மங்கலமான தனது பங்களாவுக்கு நண்பரை வரவழைத்து - விருந்தளித்து உபசரித்து - கட்டுக்கட்டாக பணத்தையும் பட்டு பீதாம்பரங்களையும் அளித்தான் - அதைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை, சாம்பசிவம் - ''இதெல்லாம் மாயை - சிற்றின்ப மோகவலைபோல் சிக்குண்டு உழலாதே!. ... சந்யாசம் தான் உனக்கு நிரந்தர சுகத்தைத்தரும் இல்லறத்திலிருந்து துறவு நிலைக்கு வரும் மார்க்கத்தை உனக்கு கற்றுத் தருகிறேன்... சுற்றத்தை உதறித்தள்ளு'' என்றான்!....

சிரித்துக் கொண்டான் பூரணலிங்கம்! ''என் அன்னை என்மீது உயிரையே வைத்திருக்கிறாள் - எனக்கு ஏதாவது என்றால் - என் மனைவி அப்போதே உயிரை விட்டு விடுவாள் - பிள்ளைகளின் பாசமோ பேசிமுடியாது. எனக்காக உயிரைக் கொடுக்க எத்தனையோ பேர் இருக்கிறார்கள் - உனக்குத்தான் யாருமில்லை!... என்ன உதவி வேண்டும். சங்கடப்படாமல் - தாராளமாகக் கேள். நான் உதவி செய்கிறேன்'' என்றார் பூரணலிங்கம்.

சாம்பசிவம் அமைதியாகப் பேசினான். ''இந்த உலகத்தின் மீது நீதான் பற்று வைத்திருக்கிறாய்.... நீதான் எல்லாவற்றையும் இழுத்துப் பிடித்துக் கொண்டு விட மறுக்கிறாய்.... யாருக்கும் உன் மீது பற்று இல்லை. நீ இல்லாவிட்டால் கூட அவர்கள் அவர்களுக்காக வாழ்வார்கள். இதை விளங்க வைக்க நான் உனக்கொரு உபாயம் கூறுகிறேன். வாசியை அதாவது சுவாசத்தை அடக்க வழி சொல்லித்தருகிறேன். மரணம் வந்து விட்டது போல் நடிக்கக் கற்றுத்தருகிறேன்.''

''அய்யய்யோ வேண்டாம் விபரீதம்! எனக்கு மரணம் என்றால் - என் குடும்பத்தினர் அத்தனை பேரும் - ஒட்டுமொத்தமாக உயிரை விட்டு விடுவார்கள்'' என அலறினான் பூரணலிங்கம்....

''அப்படி யாருக்காவது மரணம் நேர்ந்தால் நான் என் உயிரைக் கொடுத்து மீட்டுத் தருகிறேன்.... அது மட்டுமல்ல நீதான் உயிரோடு இருக்கப் போகிறாயே - மூச்சைத்தான் அடக்கிக் கொள்வாய். உலகில் நடப்பது யாவும் உன்னால் உணரமுடியும். இது ஒரு பரிசோதனை தான். இந்த உலகம் மாயை ஆனது - வாழ்க்கை போலியானது - இதையெல்லாம் நீ அறிந்துகொள்ள இது ஒரு வழி'' என விளக்கினான். ஒரு வழியாக - நண்பனின் திட்டத்துக்கு ஒத்து வந்தான் பூரண லிங்கம்.

வாசியை அடக்கும் உபாயத்தை அவனுக்குக் கற்றுத்தந்தான் சாம்பசிவம்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. அன்று கடைகூட லீவு நாள்தான். காலை பத்துமணியளவில் - அனைவரிடமும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்த பூரணலிங்கம் நெஞ்சு வலிக்கிறது என்றான். அனைவரும் பதறிப் போனார்கள். டாக்டருக்குப் போன் செய்தனர் - டாக்டர் வந்து பார்த்தபோது - பூரணலிங்கத்தின் நாடி அடங்கிவிட்டது - மரணமடைந்து விட்டதாக அறிவித்துவிட்டு டாக்டர் போய்விட்டார்.... ஒரே அழுகுரல். ஓலம்.... ஊரே கூடிவிட்டது. பூரணலிங்கத்தின் பெருமை பேசப்பட்டது. கதையாகிவிட்டான் பூரணலிங்கம் - நடப்பதையாவும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான் பூரணலிங்கம்! இவன் நினைத்ததுபோல யாரும் அதிர்ச்சியடைந்து மரணமடையவில்லை. ''மகனே என்னை காசிக்கு அனுப்புவதாகச் சொன்னாயே'' என புலம்பினாள் தாய்.... ''இனி யாரை நான் அத்தான் என அழைப்பேன்'' என்று கதிறனாள் மனைவி - ''வெளிநாட்டுக்கு அனுப்பி என்னை மேல்படிப்பு படிக்கவைப்பேன் என்று கூறினீர்களே'' எனக் கலங்கினான் மகன் .... இப்படி தொடர்ந்து அழுதால் தொண்டை வரண்டு விடும் - என ஆர்லிக்ஸ் கரைத்து கொடுத்தார்கள் - மனைவி அதை சாப்பிட்டுவிட்டு - சற்று ஓய்வெடுத்துக் கொண்டாள். பசிதாங்க முடியாதவர்கள் மறைவாகப் போய் சாப்பிட்டு விட்டு வந்தார்கள். தூல தேகம் நாற்றம் எடுக்கு முன் அடக்கம் செய்து விடலாம் எனப் பேசிக்கொண் டனர். மயானத்தில் நினைவு மண்டபம் எழுப்பணும் எனவும் பேசப்பட்டது. மரணம் என்பது இயற்கை, யார் வெல்ல முடியும்? என்ற வேதாந்தமும் இடையே வந்து போனது - சந்யாசியான சாம்பசிவம் வந்தாள் - மீண்டும் ஓலம் - அழுகை - கதறல் - உங்கள் நண்பர்போய்விட்டாரே என்று கதறினர். ''அழாதீர்கள் - அவன் எங்கேயும் போய்விடவில்லை. மீண்டும் உயர்ப்பித்து எழுவான். ஒரு டம்ளர் பால் கொண்டு வர்ருங்கள்'' என்றான் சாம்பசிவம். பாலும் வந்தது மடியில் தயாராக வைத்திருந்த சக்கரைப் பொடியை எடுத்து ''இது இமய மலைச் சூரணம், மாண்டவர் மீள்வார் '' எனக் கூறி பாலிலே போட்டான்... ''இவன் மீது யாருக்குப் பாசம் அதிகமோ அவர்கள் உட்கொண்டால் போதும் இவன் உயிர் பெற்று எழுவான்'' என்றான் சாம்பசிவம். கொடுங்கள் ''கொடுங்கள் நான் சாப்பிடுகிறேன்'' எனக் கைகள் நீண்டன.

# முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின்
# ''திருநாவுக்கரசர்'' – ஒலிநாடா மதிப்புரை

– அ. நிறைமதி, பி.எல்.

ஒலிநாடா கிடைக்கும் இடம் : முனைவர் இரா. செல்வகணபதி
H 15/2 கரிகாலன் தெரு,
கலாசேத்ரா காலனி,
பெசன்ட் நகர், சென்னை - 90.

விலை : ரூ. ஐம்பது மட்டும்

உலகேத்தும் உழவாரப் படையாளியான ''திருநாவுக்கரசர்'' அருள்வரலாற்றினை அற்புத வரலாற்றினைத் தம் வெண்கலக் குரலில், கடல்மடை திறந்தாற்போல் கவன்மிகு சொல்லழகுமிளிர கருத்தாழம் ஒளிர அற்புத ஒலிநாடாவாக வடித்துத் தந்துள்ளார் ''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள்.

திருநாவுக்கரசர் அருள்வரலாறு சத்தியசோதனை என்று கூறும் ஆசிரியர், காந்தியடிகளின் சத்தியாக்கிரக வழிமுறையை அப்பரடிகளே முதன்முதலில் உலகிற்கு உணர்த்தியவர் என்று வலியுறுத்திக் கூறுகிறார். சாக்ரடீஸ், மகாகவி பாரதியார் போன்ற சான்றோர்களின் வாழ்க்கைச் சான்றுகளையும் இணைத்துக் காட்டுகின்றார்.

சைவசமயம் பெண்மைக்கு ஏற்றம் தரும் ஒப்பற்ற சமயம் என்பதைத் திலகவதியாரின் வாழ்க்கையை விவரிக்கும்போது எடுத்துக்காட்டும் முனைவர் இரா. செல்வ கணபதி அவர்கள், சைவ சமய குருவாக திலகவதியாரைத் தலைமேற் கொண்டு போற்றுவதோடு, பெண்கள் வாழ்க்கையே தியாக வாழ்க்கையாகத் திகழ்வதால், அவர்களுக்குத் தனியே துறவினைச் சைவசமயம் வற்புறுத்துவது இல்லை எனவும் விளக்குகின்றார்.

இவ்வொலி நாடாவை திருக்கோயில்கள் தோறும் காலை, மாலை நேரங்களில் ஒலிபரப்பினால், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் அன்பர் எல்லாம் சமய அறிவு பெற்று மேன்மை பெறுவர் என்பது திண்ணம்.

''பொறுங்கள். இதிலே ஒரு கண்டிப்பு இருக்கிறது - யார் இந்த சூரணத்தை உட்கொள்கிறார்களோ - அவர்களது உயிர் அவனது உடலுக்குள் வந்துவிடும். சூரணம் உண்டவர்கள் மாண்டு போவார்கள்'' என்றான் சாம்பசிவம்....

அடுத்த கணம் அங்கே சாம்பசிவத்தை தவிர மற்றவர்களெல்லாரும் போய்விட்டனர். ''எனது நண்பனுக்காக நான் என் உயிரைக் கொடுக்கிறேன்'' எனக் கூறி பாலைக் குடித்தான் சாம்பசிவம். எழுந்து உட்கார்ந்தான் பூரணலிங்கம்....

''இப்போது சொல் - உன்மீது பாசமிருக்கலாம் அன்பிருக்கலாம் - உயிரைக் கொடுப்பார்களா? எல்லாமே மாயை. உன் உடலுக்குத்தான் அனைவரும் உறவுக்காரர்கள் - உயிருக்கு உறவு காலன் ஒருவன் தான்''.... என்றான் சாம்பசிவம்.

''வாழ்க்கை என்னவென்று புரிந்துவிட்டது.... உனது காவி அங்க வஸ்திரத்தைக் கொடு'' என வாங்கிய பூர்ணலிங்கம் - பட்டு வேட்டியைத் தூக்கி எறிந்து விட்டு காவியை இடுப்பில் கட்டிக்கொண்டு - முன்னே நடந்தான். சாம்பசிவம் அவனது பின்னே நடந்தான்.

***

# ஸ்ரீ ஐயப்ப வழிபாட்டில் பல தெய்வ வழிபாடுகள்

**- டாக்டர் டி. செல்வராஜ்**

துளசி, உருத்திராக்க மாலைகளை அணிந்து, சற்றும் விலகாத கடும் விரதம் காத்து, இருமுடி ஏந்தி, குருசாமியைப் பின் தொடர்ந்து புறப்பட்டு, ''சாமியே சரணம் ஐயப்பா'' என்று வழியெல்லாம் முழக்கமிட்டு, நெடும்பயணம் மேற்கொண்டு ஐயப்ப சாமிகள் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கின்றனர். அவனது பேரருளைப் பெற்று, அளப்பற்ற களிப்பினை அடைகின்றனர்.

பெருவழிப் பயணத்தின்போது, எருமேலி முதல் சபரிமலை மகா சன்னிதானம் வரை ஐயப்ப சாமிகள் பல திருத்தலங்களையும் அங்கங்கே எழுந்தருளியுள்ள பல தெய்வங்களையும் தரிசிக்கின்றனர். அத்தெய்வங்களை வழிபடுகின்ற முறைகளும் பலவாகும். வழிபாட்டு முறைகள் சில ஸ்ரீ ஐயப்பனுக்கே உரியன.

**ஆறு சமயங்கள்**

பயணத்தின் போது ஆறு சமயங்களுக்கு முரிய தெய்வங்களை ஐயப்ப சாமிகள் வழிபடுகின்றனர்.

**1. கணபதி வழிபாடு (காணபத்யம்)**

எந்தக் காரியத்தை முதன் முதல் தொடங்கினாலும், முதல் வழிபாட்டிற்குரியவர் கணபதியே.

கணபதி பூசைக்குக் கைம்மேல் பயன் கிடைப்பதால், பக்தர்கள் அவரை முதலில் வழிபடுவது வழக்கம்.

ஐயப்ப சாமிகள் இருமுடி ஏந்தி, கணபதியை வழிபட்டு, சிதறு தேங்காய் உடைத்துப் பயணத்தைத் தொடங்குகின்றனர்.

பம்பா நதிக்கரையில் வீற்றிருக்கின்ற பம்பா கணபதியை வழிபட வேண்டும்.

மகா சன்னிதானத்தில் கன்னி மூலைக்கணபதி வீற்றிருக்கின்றார். இவரை முறைப்படி வழிபட்டு உடைத்த நெய்த் தேங்காயின் துண்டுகளை மகா கணபதியின் ஓம குண்டத்தில் போட வேண்டும். சிதறு தேங்காய் ஒன்றைச் சன்னிதியில் உடைப்பது முறை.

**சிதறு தேங்காய்**

தேங்காய் சிதறும்படி தரையில் எறிவது கணபதிக்கேயுரிய வழிபாட்டு முறையாகும். இப்போது, சிதறு தேங்காயை எறிந்து வேறு பல தெய்வங்களை வழிபடுகின்றனர்.

ஐயப்ப சாமிகள் கணபதியை வழிபடுகின்ற போதும், பயணத் தொடக்கத்தில் வீட்டை விட்டு வெளியேறும் போதும், பயணத்தை முடித்து வீட்டினுள் நுழையும்போதும் சிதறு தேங்காய்களை உடைக்கின்றனர். பதினெட்டுப்படிகளில் ஒன்றில் அவர்கள் சிதறு தேங்காயை உடைக்க வேண்டும்.

கணபதி வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், கண்ணேறு (திருஷ்டி) கழிக்கவும், பலியிடுவதற்குச் சமமாகவும் சிதறு தேங்காய்கள் உடைக்கப்படுகின்றன.

**2. முருக வழிபாடு (கௌமாரம்)**

தமிழகத்தில் முருக வழிபாடும், இதற்கு நிகராகக் கேரளத்தில் ஸ்ரீ ஐயப்ப வழிபாடும் புகழ் பெற்றவை.

கணபதியும், முருகனும் ஸ்ரீ ஐயப்பனின் பரிவாரத் தெய்வங்கள் ஆவர்.

மகா சன்னிதானத்தின் ஒரு பகுதியில் முருகனுக்கு ஒரு சன்னிதி உள்ளது. இவரையும் ஐயப்ப சாமிகள் பணிகின்றனர்.

**3. சிவ வழிபாடு (சைவம்)**

சிவனுக்கும், நாராயணனின் அவதாரமான மோகினிக்கும் பிறந்தவன் ஸ்ரீ ஐயப்பன் என்பது சைவ சமயக் கொள்கை. ஸ்ரீ ஐயப்பனுக்கு நடைபெறுகின்ற பெரும்பாலான வழிபாட்டு முறைகள் சைவ சமயத்தைச் சார்ந்தவை.

1) **ஸ்ரீ ஐயப்ப லிங்கம் :** ஸ்ரீ ஐயப்பனின் துறவுக் கோலம் மிகக் கவர்ச்சியானது; தெய்விகப் பொலிவு மிளிர்வது. பீடத்தின்மேல் முட்டியிட்டு அமர்ந்து, வலக்கையில் சின்முத்திரை காட்டி,

இடக்கை சரிந்த நிலையில், கம்பீரமாகத் திருக் காட்சி தருகின்ற அவனது திருக் கோலம் லிங்கத் தைப் போலத் தரிசனம் தருகின்றது. அவன் பாண லிங்கம், அவனது சரிந்த இடக்கை நீர் வழிகின்ற மனோன்மணி ஆகும்.

எனவே, ஸ்ரீ ஐயப்பனை வழிபடுகின்ற பக்தர்கள் கூடவே லிங்கத்தையும் வழிபடுகின்றனர்.

2) காளை கட்டி சிவன் கோயில்

அழுதா மேட்டில் ஸ்ரீ ஐயப்பன் மகிஷியை வதைத்தான். அதைக் காண விரும்பிய சிவன் அங்கே எழுந்தருளினான். தன் வாகனமான காளை யைக் கட்டி வைத்தான். அந்த இடமே'' காளை கட்டி'' இத்திருத்தலத்தில் சிவனும், பார்வதியும் தரிசனம் தருகின்றனர்.

3) உருத்திராக்க மாலை

உருத்திராக்க மாலையும், விபூதியும் சைவ சமயத் தின் புறச் சின்னங்களாம்.

ஐயப்பசாமிகள் துளசி மாலையுடன் உருத்திராக்க மாலையை அணிகின்றனர். விரதப்பயணமும், வழிபாடுகளும் முழுமையாக நிறைவேறிய பின் அந்த இரண்டு மாலைகளும் ஸ்ரீ ஐயப்பனுக்குச் சூட்டப்படுகின்றன.

4) சபரி மலைப்பஸ்மம் - விபூதி

பம்பா நதிக்கரையில் ஐயப்ப சாமிகள் சக்தியை வழிபடுகின்றனர். அடுத்து, அங்கு 108 அடுப்புகளி லிருந்து சாம்பலைத் தொகுக்கின்றனர். பல மூலிகை மரக்கிளைகள் முதலியன எரிந்த சாம்ப லாக அது இருப்பதால், மருத்துவக் குணங்கள் பல அதற்கு இயல்பாகவே உள்ளன.

அடுப்புச் சாம்பலை மகா சன்னிதானத்து ஆழிக் குண்டத்திலிருந்து எடுத்த ஆழிச் சாம்பலுடன் கலந்து, சலித்து நன்கு பக்குவப்படுத்துகின்றனர். இதனை அவர்கள் கொண்டு சென்ற விபூதியுடன் கலந்து, ஸ்ரீ ஐயப்பனுக்கு அபிடேகம் செய்து பிரசாதமாக ஏற் கின்றனர்.

அந்த அபிடேக விபூதியே ஸ்ரீ ஐயப்பனின் அருளும், மருத்துவக் குணங்களும் நிறைந்த ''சபரி மலைப் பஸ்மம்.''

இவ்வாறு ஸ்ரீ ஐயப்ப வழிபாடும், சிவ வழி பாடும் இணைகின்றன.

4. நாராயண வழிபாடு (வைணவம்)

1) சபரி மலை - சபரி பீடம்: சபரி மலை இராமா யணக்காலப் பழமையுடையது. சீதையைப் பிரிந்த இராமன் வரும்போது, அவனுக்குத் தித்திக்கும் தீம்பழங்களைத் தருவதற்காக ஆவலுடன் காத் திருக்கிறாள் தவத்தாய் சபரி. சபரி மலை என்பது இவளது பெயருடன் வழங்குகின்றது.

சபரி தங்கியிருந்த இடம் சபரி பீடம். இது கன்னி ஐயப்பசாமிகள் ஆராதனை செய்ய வேண்டிய முக்கியமான திருத்தலம்.

2) இராமன்

பம்பா நதி புராணப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்கது. இராமன் பம்பா நதியைப் படகின் மூலம் கடந்தான். அவனது திருப்பாதம் பதிந்த இடம் முன்னர் இருந்தது; இப்போது மறைந்தது.

பம்பா நதிக்கரையில் இராமனும், அனுமனும் வீற்றிருக்கின்றனர்.

இரு சமய இணக்கம்

ஸ்ரீ ஐயப்பன், சிவன் நாராயணன் என்ற இரு பரம்பொருள்களின் பேராற்றல்கள் இணைந்த திருமேனி யுடையவன். ஆகவே, அவனிடமும், அவனை வழிபடுகின்ற முறைகளிலும் அந்த இரு பெருந் தெய்வங்களின் அம்சங்கள் நிறைந்திருப்பதில் வியப் பொன்றுமில்லை.

1) அபிடேகமும், அலங்காரமும்: சிவன் அபிடேகப் பிரியன். நாராயணன் அலங்காரப்பிரியன். ஸ்ரீ ஐயப்பன் விரதப்பிரியன்; நெய் அபிடேகப் பிரியன்.

ஏறக்குறைய, காலை 5-30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஸ்ரீ ஐயப்பனுக்கு நெய் அபிடேகம் நடைபெறுகின்றது. அப்போது அவனது அபிடேகக் கோலம் சிவனது திருக்கோலம்.

பிற்பகல் 4 மணி முதல் ஸ்ரீ ஐயப்பனைப் பட்டு ஆடைகளாலும், பற்பல அணிகளாலும், பல வண்ண மலர்களாலும் சிறப்பாக அலங்கரிக் கின்றனர். அப்போது இந்த அலங்காரக் கோலம் நாராயணனது திருக்கோலம்.

ஆகவே, ஸ்ரீ ஐயப்பன் முற்பகலில் சிவன்; பிற் பகலில் நாராயணன்.

**2) நெய்த் தேங்காய் :** தேங்காய் - முக்கண்களைக் கொண்ட இது சிவனுடன் தொடர்புடையது.

நெய் - நாராயணன் பள்ளி கொண்ட பாற்கடலில் அவதரித்த காமதேனுவின் அம்சம் பசு. அப்பசு வின் பாலைப் பக்குவப்படுத்திச் செய்யப்பட்ட நெய் நாராயணனுடன் தொடர்புடையது.

இவ்வாறு இரு பெருந்தெய்வங்களின் அம்ச முடைய நெய்த்தேங்காயை ஐயப்ப சாமிகள் ஸ்ரீ ஐயப்பனாகவே போற்றி வழிபடுகின்றனர்.

**3) மாலைகள் :** நாராயணனுக்கு உரியது துளசி மாலை. சிவனுக்கு உரியது உருத்திராக்க மாலை. இந்த இரு மாலைகளையும் ஐயப்ப சாமிகள் அணிகின்றனர். அவர்களுக்கு அந்த இருபெருந் தெய்வங்களும் நெடும் பயண வழித்துணைக் காப்பு ஆவர்.

**4) பிரசாதங்கள் :** ஸ்ரீ ஐயப்ப வழிபாட்டின் போது பல வகைப்பட்ட பிரசாதங்கள் வழங்கப்படு கின்றன.

மஞ்சள் - எல்லாத் தெய்வங்களுக்கும் மங்கல மானது.

விபூதி - சிவனுக்குரியது

குங்குமம் - அம்மனுக்குரியது

சந்தனம் - நாராயணனுக்குரியது

இவை நான்கும் சிறப்பான பிரசாதங்கள். அபிடேக நெய் - ஸ்ரீ ஐயப்பனின் திருமேனியைத் தீண்டி வந்த இது மகாப்பிரசாதம்.

இவையும் இவை போன்ற பிறவும் இரு சமய இணக்கத்திற்குச் சான்றுகளாம். அந்த இரு சமயங் களைச் சார்ந்தவர்கள் வயது, இனம், சாதி, தகுதி, மொழி, ஊர், நாடு முதலிய எந்த விதமான வேறுபாடுகளையும் கருதாமல், பிற சமயங்களைச் சார்ந்த பக்தர்களுடன் கூடி ஸ்ரீ ஐயப்பனை வழி படுகின்றனர்.

**5. சக்தி வழிபாடு (சாக்தம்)**

காளை கட்டியில் ஆதி பராசக்தியும், கரிமலை யில் பகவதியும், துர்க்கையும் எழுந்தருளியுள்ளனர்.

ஸ்ரீ ஐயப்பனை என்றேனும் மணம்புரிய வேண்டும் என்ற எண்ணத்துடன், அவனுக்கு இடப் புறம் காத்திருக்கின்றவள் மாளிகைப்புறத்தம்மன், (மஞ்சமாதா) இவள் ஸ்ரீ ஐயப்பனின் சக்தி வடிவம்.

அம்மனின் திருமுன் மஞ்சள், குங்குமம், பட்டுத்துணி, வெற்றிலைப் பாக்கு முதலிய காணிக்கைப் பொருள்களை வைத்து வழிபட்டு, ஒரு தேங்காயை உருட்டி விடவேண்டும்.

மேற்கண்ட சக்தி வழிபாடுகள் அனைத்தும் சாக்த சமயத்தைச் சார்ந்தவை.

**6. சூரிய வழிபாடு (சௌரம்)**

**1) சூரிய நமஸ்காரம் :** பயணத்தின்போது காலைக் காலங்களில் சூரிய நமஸ்காரம் செய்கின்ற ஐயப்ப சாமிகள் பலர் ஆவர். கணபதிக்கும், அடுத்துக்கண் கண்ட தெய்வமான சூரியனுக்கும் முதல் வணக்கங் கள் உரியன.

**2) சோதி வழிபாடு :** ஸ்ரீ ஐயப்பன் தை மாத முதல் நாள் மகர சங்கராந்தியன்று காந்தமலைச் சோதியாய்த் தரிசனம் தருகின்றான். அந்த ஸ்ரீ ஐயப்ப சோதியை அனைவரும் கண்டு பக்திப் பரவசத்துடன் வழிபடுகின்றனர். சோதி வழி பாட்டுடன் ஸ்ரீ ஐயப்ப வழிபாடு நிறைவு பெறுகிறது.

சோதி வழிபாடு என்பது சூரிய வழிபாட்டில் அடக்கம்.

மேலும் ஸ்ரீ ஐயப்ப வழிபாட்டு நெறிகள் சில, புத்த சமயத்திலும் காணப்படுகின்றன.

இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த வாபரை ஐயப்ப சாமிகள் வழிபடுகின்றனர்.

**1. புத்தம் :** நாராயணனின் அவதாரம் புத்தர் என்று சிலர் கருதுகின்றனர்.

ஸ்ரீ ஐயப்பன், புத்தர் இருவருமே துறவுக்கோலம் பூண்டவர். ''சாஸ்தன்'' என்ற பெயர் இரு வருக்குமே பொதுவானது.

சாஸ்திரங்களில் வல்லவன் 'சாஸ்தன்', இந்த வட மொழிப் பெயர் 'சாத்தன்' என்று தமிழில் திரிந்தது. ஐயன் என்பது சாத்தன் என்ற வடமொழிப் பெயருக்குச் சமமான தமிழ்ப்பெயர். ஐயன் = உயர்ந்தவன், குரு, கடவுள், ஐயன் + அப்பன் = ஸ்ரீ ஐயப்பன்.

ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் அமைந்த பக்தர் களின் கூட்டு வழிபாடும், கூட்டமாகப் பயணம் செய் வதும், சரண முழக்கமிடுவதும், 'சரணம்' என்ற

சொல்லும் புத்த சமயத்திலும் இருக்கின்றன. இவை போன்ற வழிபாட்டு முறைகளில் ஸ்ரீ ஐயப்ப வழிபாடும், புத்த சமயமும் ஒத்து இயங்குவதைக் கவனிக்கலாம்.

2. இஸ்லாம் : வாபர் அலி என்பவர் ஸ்ரீ ஐயப்ப னின் இஸ்லாமிய நண்பர்.

1) எருமேலி : வாபர் அலியின் சன்னிதி எருமேலி தர்ம சாஸ்தா சன்னிதிக்கு எதிரில் இருக்கிறது. இங்கே ஐயப்ப சாமிகள் வாபரை வழிபட்டு, வலம்வந்து, காணிக்கை செலுத்திக் கற்பூரம் ஏற்றி, வணங்கி, அவரது அனுமதியைப்பெற்ற பிறகே மலையேறத் தொடங்குகின்றனர். வாபர் சன்னிதியில் விபூதியே பிரசாதமாக வழங்கப் படுகிறது.

பேட்டைத்துள்ளல் வாபர் சன்னிதி அருகில் ஐயப்ப சாமிகள்'' பேட்டைத் துள்ளல்'' என்ற மகிழ்ச்சி நடனத்தை ஆடுகின்றனர். இந்த நடனம் ஸ்ரீ ஐயப்பனின் வரலாற்றுடன் தொடர்புடையது.

பந்தள மன்னன் இராஜசேகரனின் ஆணைப் படி, அவனின் வளர்ப்பு மகன் ஸ்ரீ மணிகண்டன் புலிப்பாலைக் கொண்டுவரக் காட்டுக்குள் நுழைந் தான். புலிகளுடன் மீண்டான். அவனைக் கண்ட வேடர்கள் பாடினர்; நடனம் ஆடினர்.

வேடர்களைப்போல் வேடம் புனைந்த ஐயப்ப சாமிகள் மிக்க மகிழ்ச்சியுடன் தம்மை மறந்து துள்ளித்துள்ளி நடனமாடுவது ''பேட்டைத் துள்ளல்,'' குறிப்பாகக் கன்னி ஐயப்ப சாமிகள் கூடுதல் ஆர்வத்துடன் கூத்தாட வேண்டும்.

2. மகா சன்னிதானம் : ஸ்ரீ ஐயப்பனின் மகா சன்னிதானத்துக்கு எதிரில் வாபரின் மற்றொரு சன்னிதி உள்ளது. இங்கே மிளகு, நெல், சந்தனம், ஊதுபத்தி, நெய், தேங்காய், மணப்பொருள்கள் முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்தி வழிபட வேண்டும்.

மிளகு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இது அருளாற்றல் நிறைந்தது. குழந்தைகளின் நோய் களையும், தோஷங்களையும் அறவே போக்க வல்லது.

## வழிபாடுகள் பல

ஐயப்ப சாமிகள் பயணத்தின்போது பல தெய்வங்களையும் பிறரையும் வழிபடுகின்றனர். அந்த வழிபாடுகள் வருமாறு :-

1. பிதிரர் வழிபாடு; பம்பா நதிக்கரை : இராமன் தன் தந்தை தசரதன் இறந்ததை அறிந்து, பம்பா நதிக் கரையில் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தான் என்று அறியமுடிகிறது.

பழைய வரலாற்றைப் பின்பற்றி ஐயப்ப சாமி களும், பிதிரர்களின் ஆத்மா அமைதி பெற, அவர்களுக்காகத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்கின்றனர். அன்னதானம் செய்கின்றவர்களும் உண்டு.

2. பூத கண வழிபாடு - அப்பச்சி மேடு

அப்பச்சிமேடு என்ற பகுதியின் இரண்டு பக்கங் களிலும் அப்பாச்சிக் குழி, இப்பாச்சிக்குழி என்ற பெயருடைய இரு பெருங்குழிகள் இருக் கின்றன. இங்கே பூதகணங்களையும், துர்தேவதை களையும் அவர்களின் தலைவன் கடூரவன் என் பவன் அடக்கி வைத்திருக்கின்றான்.

அவர்களால் இடையூறுகள் ஏற்படாதபடி ஐயப்ப சாமிகள் - குறிப்பாகக் கன்னி ஐயப்பசாமிகள் அந்த இரு குழிகளிலும் அரிசி மாவு உருண்டை களையும், வெல்ல உருண்டைகளையும் போட்டு வழிபட வேண்டும்.

3. காவல் தெய்வங்கள் - திருப்படிகள்; மகா சன்னிதானம்

பதினெட்டு படிகளிலும், மகா சன்னிதானத்தி லும் சொக்க கருத்தசாமி, வலிய கருத்தசாமி, கருப்பண்ண சாமி, கருப்பாயி முதலிய காவல் தெய்வங்கள் பலர் உறைகின்றனர். அவல், நெல்பொரி, கற்கண்டு, திராட்சை முதலிய காணிக்கைகளை வைத்து, வழிபட்டு, அனுமதி பெற்றுப் பதினெட்டுப்படிகளை ஏறிக் கடக்க வேண்டும். மகா சன்னிதானத்துக்குப் போக வேண்டும்.

4. படி பூசை : சபரிமலைப்பதினெட்டுப் படிகளும் புகழ் பெற்றவை; வழிபாட்டுக்குரியவை. அத் திருப்படிகளை மலர்களால் அலங்கரித்து, இரு புறமும் விளக்குகளை ஏற்றித் தெய்வங்களைப் போலவே பூசை செய்து வழிபடுகின்றனர்.

முதல் கன்னி சாமி முதற்படியிலும், இரண்டாம் கன்னிசாமி இரண்டாம் படியிலும், இந்த முறை யிலேயே பதினெட்டாம் வருடம் வரும் சாமி பதி னெட்டாம் படியிலும் தேங்காயை உடைத்து வழிபடுவது முறை. இப்போது, கூட்ட நெருக்கடி காரணமாக இந்த வழிபாட்டு முறை கைவிடப் பட்டது.

# மழைக்காக நடைபெறும் கூட்டு வழிபாடு

சென்னை, புரசைவாக்கம் அருள்மிகு ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோயிலில் மழைவேண்டி கூட்டு வழிபாடு 21.10.2002 முதல் 4.11.2002 வரை தினமும் இரவு 7.00 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்றது.

தாய்மார்களும், மெய்யன்பர்களும் தினமும் திரளாகக் கூடி

''ஆழிமழைக் கண்ணா''

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி'' ஆகிய திருப்பாவை பாடல்களையும்,

''முன்னிக் கடலைச் சுருக்கி'' எனத் தொடங்கும் திருவெம்பாவை பாடலையும்,

''வான்முகில் வாழாது பெய்க'' எனத் தொடங்கும் கந்தபுராணப் பாடலையும்,

''வாழ்க அந்தணர்'' எனத் தொடங்கும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலையும் பாடி கூட்டு வழிபாடு செய்தனர்.

திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் திரு எம். நடராசன் இக்கூட்டு வழிபாட்டினை முன்னின்று சிறப்பாக நடத்திவைத்தார். மேற்கண்ட மழைவேண்டல் பாடல்களை அச்சிட்டு வீடுகள்தோறும் விநியோகித்து வீட்டிலிருந்தபடியே மழைவேண்டிப் பிரார்த்தனை செய்யவும் திரு எம். நடராசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்ததை அப்பகுதி மக்கள் பாராட்டி உரைத்தனர்.

5. நாக வழிபாடு : பொதுவாக நாக வழிபாடு கேரளத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. மகா சன்னிதானத்தில் இருக்கின்ற நாகராஜாவுக்கு மஞ்சள், பொரி வைத்து வழிபட வேண்டும். இதனால் சர்ப்ப தோஷம் நீங்கும். பாம்புகளால் ஏற்படுகின்ற இடையூறுகள் அகலும்.

6. கருட தரிசனம்

மகர சோதி நாளன்று, மாலையில், ஸ்ரீ ஐயப்பனை அலங்கரிக்கப் பந்தளத்திலிருந்து ஆபரணப் பெட்டி, பக்தர்களின் ஆவேசப்பக்தியுடன் கொண்டு வரப்படுகிறது. அப்போது கருடன் அப் பெட்டியின் மேல் பறந்து உடன் வருகின்ற அதிசயம் நிகழ்கின்றது. இந்தக் கருட தரிசனத் தால் பக்தர்களுக்கு விளைகின்ற நற்பலன்கள் பற்பல.

7. வாகன வழிபாடு : தெய்வங்களின் வாகனங் களும் வழிபாட்டுக்குரியன. ஸ்ரீ ஐயப்பனின் வாகனம் புலி. ஐயப்ப சாமிகள் அப்பாச்சி மேட்டில், சில வெல்லக்கட்டிகளைக் காணிக்கை யாகச் செலுத்திப் புலியைத் தியானித்து வழி படுகின்றனர்.

8. மலை முதலிய இயற்கை வழிபாடுகள்

மலை: புனிதத்தன்மை காரணமாக, சபரிமலை யையும், காந்த மலையையும் பக்தர்கள் தரிசிக் கின்றபோது வணங்குகின்றனர்.

நதி : மாலை நேரத்தில், மிதவைகளில் மெழுகு வத்தி விளக்குகளை அமைத்துப் பம்பா நதியில், சரண முழக்கத்துடன், பஜனைப் பாடல்களுடன் ஐயப்பசாமிகள் மிதக்கவிடுகின்றனர். இது ஒரு வகை நதிநீர் வழிபாடு.

இவ்வாறு இயற்கைப் பொருள்களையும் ஐயப்ப சாமிகள் வழிபடுகின்றனர்.

9. இருமுடி வழிபாடு : இருமுடி கட்டி, அதில் ஸ்ரீ ஐயப்பனை எழுந்தருளச் செய்கின்றனர். தேவை ஏற்படுகின்ற போதெல்லாம் ஐயப்பசாமிகள் இரு முடியை வழிபடுவது அவசியமாகிறது. அபிடேக நெய்த்தேங்காயும் தனிச்சிறப்புடன் வழிபடத் தக்கது.

10. ஸ்ரீ ஐயப்ப வழிபாடு : மேற்கண்டவாறு ஸ்ரீ ஐயப்ப வழிபாட்டில் பல தெய்வ வழிபாடுகள் உள்ளடங்கி உள்ளன.

***

# ''பித்தா, பிறைசூடி பெருமானே''

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

பொதுவாகவே, மனைவியைத் தவிர மற்ற மங்கையர்களை எந்த ஒரு ஆண்மகனும் சபல புத்தியோடு நோக்குவது தவறு. இதனை மக்களிடையே அறிவுறுத்த சுந்தரரையே சிவன் கருவூலமாக கொண்டு நடத்திய நாடகம் யாவரும் அறிந்த ஒன்றே.

தேவலோக அனிந்திதை, கமலினி என்ற இரு மாதரும் இறைவனால் பூலோகம் வரவும், சுந்தரரை காதல் திருமணம் செய்து கொள்ளவும் பணிக்கப் பட்டார்கள். கைலாயத்திலும் காதல் நோக்கோடு சந்தித்ததின் விளைவே, பூலோகத்திலும் காதல் நோக்கோடு திருமணம் செய்து கொள்ள இறைவனால் அளிக்கப்பட்டது.

காதல் திருமணம் நிறைவேறும் முன்னரே, பெற்றோர்கள், சுந்தரருக்கு திருமணம் செய்விக்க முற்பட்டனர். அது சமயம் இத்திருமணம் சம்பிரதாயப்படி நடந்திருக்குமாயின், இறைவனது கட்டளை என்னவாகும்? இதனைக் கருத்தில் கொண்டே, இறைவனே, முனிசிரேஷ்டராக வந்து, திருமணத்தை நடை பெறாது தடுத்தாட் கொண்டார். அப்பொழுது காளைப் பருவத்தில் முறுக்கேறிய சுந்தரர், அம்முனிவரை ''பித்தா'' என வைதது யாவர்க்கும் தெரிந்த ஒன்று.

திருவெண்ணெய் நல்லூர் சிவனே, சுந்தரரை ஆட்கொண்டு, பித்தா என முதலடி எடுத்துப் பாடுக என வானொலி வழியாய் கேட்டறிந்த சுந்தரனர், முதலில் எடுத்த முதல் பாட்டிலேயே, முதல் பதமாக, பித்தா ''என பாடத் துவங்கினார்.''

இப்பாடலில் வரும் பித்தா எனும் பதத்திற்கு, பித்தம் பிடித்தவன், சுவாதீனம் அற்றவன், பைத்தியக்காரன் என்றெல்லாம் பொதுவாக ஆன்றோர்கள் விளக்கம் கூறியிருப்பினும் அவ்வாறு இறைவரை அழைப்பது ஏன் என்பதற்கு கருவூர்த் தேவர், திருவிசைப்பாவில் கூறியுள்ளது மிகவும் அருமையானது.

பாடல் :

''தத்தையங்கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறயிரங்கூறிட்டு
அத்திலங்கு ஒரு கூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகு அளிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவர்''


என வரும் பாடலின் கருத்து மாதர்கள் மேல் வைக்கும் இன்பத்தில், லட்சத்தில் ஒரு பங்கு வைத்தாலும், தேவருலகு அருளி ஆட்கொள்ளும் எல்லையற்ற கருணை பற்றியே இறைவன் பித்தன் என அழைக்கப்படுகிறான் என்பதாகும். மற்றோர் திருவிசைப்பா பாடலில் :- பித்தனென்று ஒரு கால் பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள் செய்யும். கைத்தலம் சென்னிமேல் வைத்த கங்கை ''கொண்ட கோளேச்சுரத்தானே'' எனக் கூறியுள்ளதையும் கவனிக்கற்பாலது.


மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருச்சியிலிருந்து, திருவானைக்காவிற்கு சென்று கொண்டிருந்த சமயம், அகிலாண்டேஸ்வரி மீது பாடிய ஒரு கவியில் கூறியுள்ள கருத்து மிகவும் போற்றத்தக்கது.

பாடலைப் பார்ப்போம் :-

''அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியுருப் பாதியில் வைத்துத்
தளர் பிழைமூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன் - அதனால்
பிளவியல் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென்றொரு பெயர் பெற்றான்
களமர் மொய் கழநி சூழ் திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே''

**கருத்து** :- நீரில் மூழ்கிய ஒருவனை மூன்றே முறை தவணை கொடுத்து, பிறகு இறக்கச் செய்யும் கங்கையை தன்னுடைய சடைமுடியில் வைத்தார். என்றென்றும் அடியார்களது பிழை பொறுத்து ரட்சித்து அருளும் அன்னையை உடலின் பாதி பாகத்தில் வைத்தார். அதனால் இவர் பித்தன் என்ற பெயர் பெற்றார் போலும் எனப் பாடியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது. மேலே கூறப்பட்ட சிறப்பான கருத்துக்களோடு, பித்தன் என முதலடியில் பாடியதற்கு





குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் முடிகாணிக்கை மண்டபத்தைத் திறந்துவைத்து, ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் மரக்கன்றுகள் நட்டார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு பி.ஆர். ராஜ்மோகன், எம்.ஏ., எம்.ஃபில் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

சிறியேனது மனத்தில் தோன்றிய மற்றுமோர் விளக்கத்தையும் இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.


குடிசை வாழ் பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு தம்பதியர்க்கு, ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையைத் தாயானவள் மிகவும் அன்போடு வளர்த்து வந்தாள். சில வருடங்கள் கழித்து, கணவன் நோய் வாய்ப்பட்டு இறக்கலானான். திக்கற்ற அவன் மனைவி, பிழைக்க வழியறியாது, அண்டைவீடுகளில், வீட்டு வேலைகள் செய்தும், தொழிலாளர்களுக்கு மதியம் சாப்பாடு கொண்டுபோய் கொடுத்தும், அதனால் கிடைக்கும் சொற்ப வருவாய் மூலம் மகனைப் படிக்கவும் வைத்தாள். மகனோ பள்ளிக்கு சரிவர செல்லாமலும், படிப்பில் நாட்டம் செலுத்தாமலும் வரலானான். கூடுவாரோடு கூடி தீய பழக்கங்களை எல்லாம் கடைபிடிக்கலானான். கடைசியில் மது அருந்தவும், சிற்றின்ப நாட்டத்திலும் தன் வாழ்நாளை கழிக்கலானான். சில சமயம் பணம் தேவைப்படும் போதும், நண்பர்களின் துர்போதனையில், அண்டை வீடுகளில் திருடலானான். அது சமயம் ஊரார் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து, செம்மையாக அடித்து உதைத்தனர். இதனைக் கண்ட தாயானவள், அங்கு சென்று, ''என் மகனை அடிக்காதீர்கள். அவன் உங்கள் அடிக்குத் தாங்க மாட்டான். அவன் ஏதும் அறியாத அப்பாவி. அதற்கு பதில் என்னை வேண்டுமானால் அடித்துக் கொல்லுங்கள்'' எனப் பலவாறு அங்குள்ளோரிடம் புலம்பி அழுதாள்.

அக்கூட்டத்தில் ஒருவர் தன் நண்பரிடம், ''பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு'' எனும் பழமொழி எந்த அளவுக்கு இங்கே அனுபவத்தில் காண முடிகின்றது எனக் கூறலானார்.

இங்கு பெத்த மனம் பித்து என்பதில், வெளிப்படையான அர்த்தம் கொள்ளாது பாசம், அன்பு எனக் கருதுதலே சிறப்பாகும். ஒரு தாய்க்கு மகன் எந்த அளவு பொல்லாதவனாக இருந்த போதிலும், அவன் மேல் உள்ள பாசம், அன்பு என்று தான் கொள்ள வேண்டும். அதே போன்று எம் பெருமானும், ஆலால சுந்தரன் மேல் வைத்த பாசத்தினாலேயே, நிகழ இருந்த திருமணத்தை தடுத்து ஆட்கொள்ள வந்து சிவ முனிவராய் வெண்ணெய் நல்லூருக்கு வலிய வந்து நாடகம் ஆடினார். இத்தகைய இறைவனுடைய தாயன்பைப் போற்றியே சுந்தர மூர்த்தி நாயனார் ''பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா'' எனப் பாடியுள்ளார் எனலாம்.

# அன்புக்கு எல்லை ஏது?

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



நீர்என்றும், நெருப்பென்றும்,
நிலமென்றும், வான்என்றும்,
காற்றென்றும், கண்டஅறிவால்,
கல்விபல கற்றறிந்தோர்,
ஊர்என்றும், நாடென்றும்,
உலகென்றும் 'எல்லை'யிட்டார்,
''யார்'' என்று தானறியார்,
யாதறிந்தும் என்னபயன்? (1)

''நான்யார்''என அறிந்திடுவோர்,
ஞானநிலையில் ''ஒளி''காண்பர்,
''தான்'', ''தனது'' தவிர்த்திருப்போர்
தவநிலையில் ''ஒலி'' கேட்பர்,
''ஊன்''எனது இல்லையென,
உணர்ந்திட்டோர் 'உண்மை'' அறிவர்,
''கோன்'' ஆட்டத் தானாடும்,
கூத்தறிந்தோர், குணித்திருப்பர்; (2)

இன்பமின்பம், என்றலைவோர்,
எதிலும்இன்பம் கண்டறியார்!
துன்பதுன்பம் எனத்துடிப்போர்,
துன்பமென்றும் தொடரக்காண்பர்,
இன்பதுன்பம், இதயக்கடல்,
எண்ணஅலைகள் எழுப்பும்புயல்!
அன்புஒன்றால் மனம்வென்றோர்,
அரன்கண்டே அமைதிகாண்பர், (3)

வெறும்உடலில் ஆத்மாவின்,
''விடுதலையை'' வேண்டிநிற்போர்,
பிறப்பினின்று ''விடுதலையை''ப்
பெரும்பிணியின் ''விடுதலையைப்''
பெருவினையின் ''விடுதலையைப்
பெற்றுவிடத் துடிதுடிப்போர்
அறவாணன் அடிசேர்ந்தால்,
அடைவதெல்லாம் விடுதலையே; (4)

நன்மையென்றும், தீமையென்றும்,
நட்பு என்றும், பகைமை என்றும்,
உண்மையென்றும், பொய்மை என்றும்,
உறவு என்றும், துறவு என்றும்,
எண்ணங்களை வடிவமைத்தோர்,
எழுப்பிவைத்த ''எல்லை''களை,
அன்புஒன்றால் அழித்துவிடில்,
அரன்அருளும் அடர்ந்திடுமே. (5)

***

# வேலும் மயிலும் துணை

- **இராமகிருஷ்ணன்,** மும்பை

ஆதி சங்கரர் மெய்ப்பொருளைக் காண, முக்தி அடைய ஞானமார்க்கம் பக்தி மார்க்கம் என இரு வழி வகுத்தார். இந்த இரண்டு வழிகளிலும் கர்ம மார்க்கம் இணைந்திருக்கும். உருவமற்ற அருவ வழி பாட்டுக்கு நான் யார் என சிந்தனை செய்ய செய்ய, அருள் நெறி புரியப்படும், தானும் கடவுளும் வேறல்ல, ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறல்ல, அந்த உணர்வே, அனுபூதியே, லயமே, சமாதி மனோலயமே, ஞான உணர்வு நிலையே முக்திக்கு வித்து. அந்த வித்து முளைத்து பெருகி காய்த்து பழம் ஆகிவிடும் நிலையே முக்தி நிலை எய்தினதாம். எளிதாக சொல்லிவிட்டோம் நடைமுறையில் அதை உணர்ந்து எய்துவது அவ்வளவு சுலபம் அல்ல. பலகோடி நபர்களில் ஒருசிலரே அருணாசல ரமணமஹரிஷியாகவோ, தக்ஷிணேஸ்வர, மேற்கு வங்காள - ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸராகவோ இருக்க முடியும். ஆதிசங்கரர், இதற்கு அத்வைத மார்க்கம் என்றார்.

சாதாரண மக்களுக்கு பாமர மக்களுக்கு சுலபமாக, கடைபிடிக்கக்கூடிய மார்க்கம் பக்திமார்க்கம். ஆதிசங்கரர் ஷன்மத மார்க்கம் என்றார். கணபதி, சிவ, சக்தி, சூர்ய, விஷ்ணு, சுப்ரமண்ய உருவ வழிபாட்டை, மூர்த்தி வழிபாட்டை, பக்தி மார்க்க வழிபாட்டை ஷண்மதம் என்றார்.


ஸ்ரீ வியாஸர் அருளிய பதினெண்புராணங்களில் கந்தபுராணம் 1.25 லட்ச சுலோகங்கள் கொண்டுள்ளது. கந்தனைப்பற்றி 3000த்திற்கும் மேலான சுலோகங்கள் கந்தன் தோற்றம், கந்தலீலை, அவதார ரகசியம், மஹிமைகளை உரைக்கும். தக்ஷன் நடத்தும் வேள்விக்கு மருமகன் சிவனையும், மகள் உமையையும் அழைக்கவில்லை. சிவன் தடுத்தும் அழையாமல் வேள்விக்கு போனாள் தாட்சாயணி. தக்ஷனும் சிவனுக்கு மரியாதை செய்யாது வேள்வி அவிர்பாகம் தராமல் நடத்திய வேள்வியில் தக்ஷனையும் அழித்து தன் உடலையும் அழித்தாள் தாட்சாயணி. தட்சனின் யாகத்தில் கலந்துகொண்ட தேவர்களைத் தண்டிக்க வேண்டி நேர்ந்தது. சூரபத்மன், தாரகன், சிங்கமுகாசுரன் முதலியோரின் சிவ வரத்தால், தேவர்கள் யாவர்களையும் வென்று அடிமை படுத்தினான்; கொடுமை படுத்தினான்; யாவரையும் சிறைப் படுத்தினான். சாகா வரம் வேண்டிய அசுரனுக்கு சிவன் தன் ரூபத்தாலே அழிவு; நூதனமான ஆயுதத்தால்தான் அழிவு என்றும் வரம் கொடுத்துவிட்டார்.

அவஸ்தைபடும் ப்ரம்ம விஷ்ணு இந்திரன் தேவர்கள் யாவரும் மோன நிலையிலிருக்கும் சிவ பெருமானிடம் முறையிட அருள்புரிவதாக கூறினார். ஆனால் அவர் யோக நிலையிலேயே மூழ்கியிருந்தார். மன்மதனை வேண்டிட, காலனையே உதைத்த காலகால சிவன் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்தார். மனம் நெகிழ்ந்து ஹிமவான் மகளை பார்வதியை மணந்தார். ஆகினும் தேவர்கள் துயர்தீர்க்க சிவப் புதல்வன் தோன்ற சூசகம் ஏதும் இல்லை. பிரம்ம விஷ்ணு தேவ பார்வதியின் வணக்கத்திற்கு இணங்கி, சிவன் தனது ஐந்து முகங்கள், மற்றும் அதோ முகத்தினின்றும் ஆறு பொறிகளை வெளிப்படுத்தி அக்னி, வாயுவைக் கூப்பிட்டு, அதனை ஏந்த செய்ய, அவர்கள் அந்த வெப்பம் தாங்காது கங்கையிலே விட கங்கையும் அப்பொறிகளை சரவண பொய்கையில் ஆறு தாமரை புஷ்பங்களில் சேர்த்தது. புஷ்பங்களை சேர்ந்த ஜ்யோதி ஆறு குழந்தைகளாக மாறினர். கார்த்திகை மாதர் அறுவர் குழந்தைகளுக்குப் பாலூட்டினர். சிவனும் உமையும் அங்கு வந்து சேர, உமை குழந்தைகளை அழைக்க, அணைக்க, ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும், ஒருடல் இருகால்களும் ஆனவன் ஆனான். இதனை கச்சியப்பர், குமரகோட்ட முருகன் அடி கொடுத்துப் பாடிய கந்தபுராணத்தில் குமரன் உதித்ததை இவ்வாறு கூறுவார்.

''அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய்
ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய''
அக்னி எந்தியதால் முருகனுக்கு அக்னிபூ
எனப்பெயர்.

கங்கையில் சென்றதால் கங்கையின் புதல்வர் காங்கேயன் என்பார். சரவணம் அடைந்ததால், குழந்தையாய் மாறினதால் சரவண பவன். கார்த்திகை மாந்தர் பாலூட்டி சீராட்டியதால் கார்த்திகேயன்.. (வைகாசி) விசாக நக்ஷத்ரத்தில் தோன்றியவன் ஆனதால் விசாகன். ஆறு முகங்கள் கொண்டதால், ஆறுமுகன் அல்லது ஷண்முகன், ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்ததால் - ஸ்கந்தன் அல்லது கந்தன்.

***



அழகானவன் ஆனதால் முருகன்; இளையவன் அதனால் குமரன் அல்லது குமாரன்; வேதத்திற்கு மூலாதாரமானவன் அதனால் ஸுப்ரமண்யன். ஞானஸ்வரூபமானவன் அதனால் ஞானஸ்கந்தன்; ப்ரணவத்திற்கு தகப்பன் சிவனுக்கே பொருளை உரைத்தவன் அதனால் - சுவாமிநாதன்; சிவகுருநாதன்; தகப்பன் சுவாமி. பக்தர்களின் ஹ்ருதய குஹையிலிருந்து ஆனந்தம் தருபவன் அருளை வழங்குபவன் அதனால் குகன்.

இப்படியாக முருகனின் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

சூரபதுமன் முதலான அசுரர்கள் கொடுமையை தாங்காமல், தேவர்கள் யாவரும் பரமசிவனிடம் அவர்களை ஸம்ஹாரம் செய்ய வேண்டியபோது, யாவரும் கந்தபிரானை சேனாதிபதியாக்கினர். உமாதேவியே, சக்தியே, ஒரு நூதன ஆயுதமாக, 'வேலாக' மாறினாள்; அதைக் கந்தன் ஏந்தினான். வேலை ஏந்திய பாலகனை, வேலன் என்றும், வேலாயுதன் என்றும் போற்றுவர். மஹாவிஷ்ணு கருடனை மயிலாக ஆக்கி முருகனுக்கு வாகனமாக ஈந்தார் என்று கூறுவர். இந்திரனே மயில் வாஹனமானான் என்றும் கூறுவர். திருச்செந்திலம்பதியில் வியாழ குருவால் அசுரர் வரலாறு முழுவதும் அறிந்து மயில் வாகனத்துடன், வேலைக் கையில் ஏந்தி, வீரபாகுவை தூதாகி அனுப்பி, சூரபத்மாதியர், உடன்பாட்டிற்கு வராமையால் அசுர படைகளை பூண்டொடு ஒழித்து, சிறையிலிருந்த தேவர்களை எல்லாம் மீட்டார். இந்திரன் தனது மகள் தெய்வயானையை, திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு மணம் முடித்தான். முருகர் நாரதர் சொல்லுக்கு மரியாதை கொடுத்து, நம்பிராஜனிடம் வளர்ந்துவரும், வள்ளியை, வள்ளி மலை சென்று, வேடுவனாக, வேங்கை மரமாக, கிழவனாக மாறி, நடித்து, வள்ளியுடன் ஊடல் செய்து, கடைசியில் வள்ளியையும் மணம்புரிந்தான். வள்ளியும் தேவானையையும், முன்பு மஹாவிஷ்ணுவின் ஆனந்த கண்ணீரில் தோன்றிய சுந்தரவல்லி, அமிர்தவல்லியாவர். அவர்கள் முருகப்பெருமானை மணக்க வணங்க, முருகன், அமிர்தவல்லியை இந்திரன் மகள் தெய்வ குஞ்சரியாகவும், சுந்தரவல்லியை நம்பிராஜன் மகளாகவும் தோன்றச் செய்து மணம்புரிந்தான். சூரபத்மாதியர் ஸம்ஹாரமும், வள்ளி தேவானை மணமும் முருகன் அவதார காரணம். வைகாசி விசாகம் கந்தன் தோன்றிய தினமானால், ஐப்பசி வளர்பிறை ஷஷ்டி, கந்தன் சூரஸம்ஹாரம் செய்த தினம். இந்த நாட்களில் திருச்செந்தூரில் பெரிய விழாவாக கொண்டாடப்படும். மற்ற ஏனைய முருகத் தலங்களிலும் விமரிசையாக கொண்டாடுவர். விசாகம், (சுக்ல) ஷஷ்டி, கார்த்திகை, செவ்வாய், வெள்ளி தினங்கள் முருகனுக்கு மிக உகந்த நாட்கள் என்பர். பலபேர்கள் விரதம் இருப்பர். காவடி எடுப்பர். முருகனுக்கு சிறப்பு வழிபாடு, அபிஷேகம், ஸஹஸ்ர நாமஅர்ச்சனை, வீதி வலப்புறப்பாடு செய்வர்.

இதனால் பலன் அடைந்த அன்பர்கள் அனேகம் ஆவார்.

சஷ்டி விரதம் இருந்து சண்முகனை வழிபட்டு நாமும் சகல சௌபாக்கியங்கள் பெற்று இன்புறுவோமாக!

* * *

# தீபாவளி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் ஆதிகாலம் முதலாகவே தொடர்ந்து போராட்டம் நடந்துகொண்டு தான் வந்துள்ளது!

ஒரு சமயம் 'இரண்யாட்சகன்' என்னும் கொடிய அசுரன், ''கர்ம பூமியில் மானிடர்கள் செய்யும் பூஜைகளும் யாகங்களும் தானே தேவர்களுக்கு அவிர்பாகம் மூலம் அதிக ஆற்றலை அளிக்க வல்லதாக உள்ளது! அப்படிப்பட்ட ஆற்றலை அளிக்க வல்ல பூமியையே கண் காணாமல் மறைத்து, தேவர்களைப் பூஜிக்கும் மனித குலம் அழியட்டும் என்றும், தேவருலகம் தவிக்கட்டும்'', என்றும் பூமியையே நீருக்கடியில் எடுத்துச் சென்று விட்டான்.


பிரளயங்களும், அழிவுகளும் பூமிக்குப் புதியனவல்ல; ஆனால் மீண்டும் பூமிக்கு உயிர் வேண்டும். அதை நீரிலிருந்து மீட்டு மேலே கொண்டு வர, தேவாதி தேவர்கள் யாவரும் ஒன்றுகூடி, கைலாயம் பிரம்ம லோகம் சென்று இதைக் கூற, சிவனும், பிரம்மாவும் சேர்ந்து இதைக் கவனித்து, ஸ்ரீமகா விஷ்ணுவையே கலந்து ஆலோசிப்போம் என்று புறப்பட்டனர். அப்படிக் கலந்து ஆலோசனை செய்ததில் ஸ்ரீ ஜனார்த்தனனான, ஸ்ரீ மகாவிஷ்ணு ஆனவர், அவர்கள் வேண்டுகோளை ஏற்று பூமியை வெளிக் கொண்டுவருவதாகக் கூறி வராக அவதாரம் எடுத்து (பன்றி) கால வெள்ளத்தின் ஆழத்தில் பாய்ந்து நீந்தினார். கடலுக்கடியில் நெடுகக் குடைந்து, புதையுண்டிருந்த பூமியை வெளிப்படுத்தினார். வழியில் இரண்யாட்சன் மிகுந்த ஆவேசத்துடன் தடுத்துப் போரிட்டான். அவனைத் தன் வராக முகத்தின் வால் பற்களால் கிழித்து வதம் செய்தார். குருதியில் நனைந்த கொம்புகளால் பூமியை ஏந்திக் கொண்டு, தாமரை மொட்டைப்போல் நீரின் மீது மிதக்கும்படி கொண்டு வந்தார். இதைக் கண்ட தேவாதி தேவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து அவரை 'ஸ்ரீ பூவராக மூர்த்தி' எனப் பூஜித்து வணங்கி வழிபட்டனர்.


அப்போது பூமாதேவியானவள் மனோகரமான உருவத்தோடு மிகவும் பேரழகியாகத் தோற்றமளித்தாள். அந்நிலையில் அவளைக் கண்டதும் வராக உருவிலிருந்த விஷ்ணு அவள் மீது மோகம் கொண்டு சுய உருவெடுத்து, அவளோடு கூடிக்கலந்தார். இவ்வாறு ஒரு வருடகாலம் கடந்தபின், அதன் விளைவாக அவர்கள் 'கடேசன்' என்ற புத்திரனைப் பெற்றார்கள். தன்னுடன் கூடி இன்புற்றவள் பூமா தேவி என்று தெரிந்து, அவளுக்கான ஆடைகளையும், அணிகலன்களையும், சுவை மிக்க உணவு வகைகளையும் மிகவும் கனிவோடு கொடுத்து, ''பூ தேவி! நீ எனக்கு ஸ்ரீ தேவியைப் போல், மற்றொரு மனைவியாகி விட்டாய்! நீ அனைத்திற்கும் ஆதாரமாக இருந்து, மகரிஷிகளாலும், மனுக்களாலும், தேவர்களாலும், தானவர்களாலும், சித்தர்களாலும் போற்றிப் பூஜிக்கப்படுவாய். தானம் செய்யும் தினத்திலும், பிரயாண காலத்திலும் , வித்தை, வீடு, குளம் முதலியவற்றைத் தொடங்கும்போது, மற்றும் விவசாயத்தைத் தொடங்கும்போது நீ பூஜிக்கப் படுவாய். இந்தக் காலத்தில் உன்னைப் பூஜிக்காதவர்கள் துன்பமென்னும் நரகத்தை அடைவார்கள்'', என்று அருள் செய்தார்.

அதைக் கேட்டதும் பூமிதேவியானவள், ''பரமாத்மாவே! உமது கட்டளையினால் வராக வடிவில் தாவர, ஜங்கமங்களோடு (இனங்களோடு) கூடிய உலகங்கள் அனைத்தையும் ஒரு விளையாட்டாகத் தாங்குகிறேன். என்னையும் வருத்தும் நிலை ஏற்பட்டால் அப்பொழுது வருந்துவேன். தாங்களும் எனக்கொரு வரம் அளிக்க வேண்டும். என்றாள் ஸ்ரீ பூவராக மூர்த்தியும், ''உன் விருப்பம் போல் வரம் கேள்'', என்றார். பூமதேவி, தன் மகனுக்கு மரணம் நேரக்கூடாது என்று கேட்டவுடன், ஸ்ரீ பூவராகவரும், ''நீயே அருகிலிருந்து வேண்டும்போது அவனுக்கு மரணம் நேரும்'', என்று விதித்தார்.

ஸ்ரீ பூவராக மூர்த்திக்கும் பூமாதேவிக்கும் பிறந்த கடேசன் என்ற புத்திரனே 'நரகாசுரன்' என்னும் அசுரனாவான்.

நரகாசுரன் நற்குணங்களுடன் நல்ல விதமாய் ஆட்சி செய்து வந்தாலும், நாளடைவில் அவனைச் சார்ந்த நண்பர்களாலும், உறவினர்களாலும், மெல்ல மெல்ல அவன் கொடுமைக்காரனாக மாறி விட்டான். தாயின் பேரில் அன்பு அதிகம் கொண்டிருந்த அவன் தாயையே எதிர்க்கும் அளவுக்கு மாறி விட்டான்.





நரகாசுரனின் காதலி, அவளது சகோதரனைக் கொன்றவனைப் பழி தீர்க்க, அவள் இவனை நாட, அது தவறு என்று நாரகாசுரனின் தாய் பூதேவி தடுக்க, இரு பெண்களின் போராட்டத்தில் காதலியின் பக்கமே பலம் அதிகமானதால், வெற்றி கண்டால் திருமணம் என்றாள். வெற்றி பெற்றபின் திருமணம் ஆனது.

அதன் பேரில் பல கொடிய செயல்களைச் செய்யத் தொடங்கினான். பூலோகத்திலுள்ளவர்கள் பயந்து நடுங்கியதுடன், என்ன செய்வது என்று தெரியாமல் இறைவனை வேண்டி நின்றனர்.

நரகாசுரனோ பூலோகத்துடன் நிறுத்தாமல் தேவலோகத்திலும் தன் வலிமையைக் காட்டத் தொடங்கினான்.

இதற்குள் ஸ்ரீ மகாவிஷ்ணு, தசாவதாரங்களில் நான்காவது ஸ்ரீ நரசிம்மாவதாரம், ஐந்தாவது வாமனாவதாரம், ஆறாவது பரசுராமாவதாரம், ஏழாவது ஸ்ரீ இராமாவதாரம், எட்டாவது பலராமாவதாரம் எடுத்து அதற்குண்டான பலாபலன்களைச் செய்துகொண்டு வரும் நாளில் தேவாதி தேவர்கள், ஸ்ரீமகாவிஷ்ணுவிடம் நரகாசுரனின் அட்டகாசத்தைத் தெரிவிக்க வைகுண்டம் சென்றனர்.

வைகுண்டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு வானவர் தேவர்களின் வருகையைக் கண்டு, ''என்ன தேவர்களே! இப்படி யாவருமாக ஒன்றுசேர்ந்து வந்துள்ளீர்கள்! உங்களைப் பார்த்தால் ஏதோ விபரீதம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிகிறது; வந்த விஷயங்களைக் கூறுங்கள்'', என்றார் அமைதியாக!

தேவர்களுக்கு அதிபதியான தேவேந்திரன், ''மகாவிஷ்ணுவே! வணங்குகிறோம். பூவுலகில் நரகாசுரனின் அட்டகாசம் தாங்காமல் இருந்தது; அங்குதான் அப்படி என்றால், அவன் தேவலோகத்தையும் விட்டு வைக்கவில்லை. ஆயிரக்கணக்கான கன்னியர்களைக் கவர்ந்து சிறை வைத்துள்ளான். இந்திர லோகத்தின் மந்திர பர்வதத்தினுடைய சிகரத்தைச் சிதைத்துச் சென்றான். மழை பெய்விக்கும் வருணனின் வெண்குடையைப் பறித்துள்ளான். என் தாயாகிய அதிதியின் அமுத கலசத்தையும், குண்டலங்களையும் கவர்ந்து அபகரித்துக் கொண்டுள்ளான். தேவர்கள் அவனால் அருளும் பொருளும் கெட்டு மிகுந்த அவதிப்படுகிறார்கள். இனியும் தாமதிக்காமல் நரகாசுரனின் அட்டகாசத்தைத் தாங்கள்தான் தீர்த்து வைத்து எங்களைக் காப்பாற்றவேண்டும்.'' என்று ஒரே மூச்சாகக் கூறினான்.

ஸ்ரீமகாவிஷ்ணுவும் தாம் அதைப்பார்த்துக் கொள்வதாக உறுதி கூறி அவர்களை அனுப்பிவைத்தார்.

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ண பராமத்மா, நரகாசுரனின் பலத்தையும், அவன் தாயான பூமாதேவியின் வரத்தையும் நினைத்து, பூமா தேவியின் அம்சமாக பூலோகத்தில் தன்னுடன் அவதரித்துள்ள சத்யபாமாவைத் தன்னுடன் கருட வாகனத்தில் ஏற்றிக் கொண்டு பறந்தார்.

நரகாசுரனின் தலை நகரம், 'பிராக்ஜோதிஷ புரம். ஏராளமான கோட்டை கொத்தளங்கள்; அவற்றைச் சுற்றிலும் நூறு காதப் பரப்பளவு தரையில் பதிக்கப்பட்ட கூராயுதங்கள்.

கிருஷ்ணன் தனது கதாயுதத்தை எறிந்து 'கிரி துர்க்கம்' எனும் கோட்டையைப் பிளந்தார்.

அக்னி துர்க்கக் கோட்டையில் தீ ஜுவாலைகள், ஜல துர்க்கக் கோட்டையில் வெள்ளப்பெருக்கு, வாயு துர்க்கக் கோட்டையில் பெரும் புயல், எதிரிகளைத் தந்திரமாகத் தாக்கும் இயந்திரப் பொறிகள் இப்படியாக அடுத்தடுத்து ஒரே பயங்கரமான எதிர்ப்புகள் தோன்றின.

ஸ்ரீ கிருஷ்ணரும், சத்யபாமாவுடன் கருட வாகனத்தில் எதிர் சென்று, அக்னி துர்க்கக் கோட்டையின் தீ ஜுவாலைகளை அணைத்தும், ஜல (நீர்) துர்க்கக் கோட்டையின் பெரு வெள்ளப் பெருக்கைத் தடுத்தும், வாயு, துர்க்கக் கோட்டையின் பெரும் புயலை அடக்கியும், எதிரிகளைத் தந்திரமாகத் தாக்கும் இயந்திர பொறிகளை உடைத்தும், நகருக்குள் பிரவேசித்தார்.

நகரில் தளபதி முரனையும், அவனுடைய சேனைகளையும் அழித்தபின், நரகாசுரனுடன் படு பயங்கரமாகப் போரிட்டார்.

இறுதியாக, இந்திரனின் வஜ்ராயுதத்தையே உடைத்த மகாசக்தி வாய்ந்த சூலத்தை நரகாசுரன், கிருஷ்ண் பகவான்மேல் ஏவ, இதைக் கண்ட சத்யபாமா, ''ஐயனே! இந்த அசுரனின் கொடுமைகள் நீடிக்க வேண்டாம்; உடனே இவனைக் கொன்று விடுங்கள்,'' என்றாள்.

தன்னைக் குறித்து வந்த மகாசூலத்தை அஸ்திரங்களால் தகர்த்தெறிந்த ஸ்ரீகிருஷ்ணர்; தன் சக்ராயுதத்தை ஏவினார்.

ஆகாயம் அதிர, அண்டசராசரங்கள் நடுங்க, சக்ராயுதம் சீறிக்கொண்டுபோய் நரகாசுரனின் தலையைத் துண்டித்தது. நரகாசுரனும் 'அம்மா தாயே', என்று கூக்குரலிட்டுக் கொண்டு பூமியில் விழுந்தான்.

இக்குரலைக் கேட்ட சத்யபாமாவின் உடலெங்கும் நடுக்கமும், உள்ளத்தில் இனம் தெரியாத கலக்கமும் ஏற்பட்டு கிருஷ்ணரிடம் ''ஐயனே! அவன் 'அம்மா' என எழுப்பிய அவலக் குரல், என் மகனே என்னை அழைத்ததுபோல, என்னுள் மிகுந்த துன்பத்தை தூண்டிவிட்டது. அதன் காரணம் என்ன? என்றார் பதட்டத்துடன்.

ஸ்ரீ கிருஷ்ணரும், 'இதற்கு முன்வினையே காரணமாகும். நான் பூமியைக் காக்க வராக அவதாரம் எடுத்து இரண்யாட்சனைக் கொன்றபோது, பூமாதேவிக்கும் எனக்கும் பிறந்த மகனே - நரகாசுரனாவான். பூமாதேவியின் அம்சமாக, சத்யபாமாவாக நீயே ஆனதால் நீ கேட்ட வரத்தின்படி, தாய் உடனிருக்க அவளுடைய தூண்டுதலின் பேரிலேயே அவனுக்கு மரணம் நேர்ந்திருக்கிறது. இதுவே அவனுடைய முடிவாகும். நீ கலங்கியதின் அர்த்தம் புரிந்ததா?'' என்று கேட்டார்.

அதுவரை இனம் தெரியாமல் தடுமாறிய சத்யபாமா, ''மகனே...!'' என்ற அலறலுடன் அவன் மேல் விழுந்து கதறினாள்.

நரகாசுரனும், ''ஐயனே! விரோதிகளால் வெல்லப்பட முடியாத நான், அன்னை, தந்தையாலேயே மரணத்தைத் தழுவுகிறேன். நான் செய்த பாபங்களை மன்னியுங்கள். நான் மறைந்த இந்த நாளை ஒரு சுபதினமாக, நன்னாளாக உலகத்தினர், ஆண்டுதோறும் கொண்டாடும்படி அருளல் வேண்டும்.'' என்றான்.


ஸ்ரீ கிருஷ்ண பகவானும், ''நீ எவ்விதம் விரும்புகிறாயோ கேள், அவ்விதமாகவே ஆக அருள் புரிகிறோம்.'' என்றார்.

நரகாசுரனும் மிகுந்த சந்தோஷமடைந்து, ''நான் இறந்த இந்நாளில் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோர் அனைவரும் பாகுபாடு இல்லாமலும், ஜாதி மத வேறுபாடு இல்லாமலும், அவரவர் சக்திக்கு ஏற்றாற் போல் புத்தாடை அணிந்து இனிப்பு பண்டங்களுடன், பந்து ஜனங்களுடன் கவலைகளை மறந்து, சந்தோஷமாக, வாணவேடிக்கைகளைக் கொண்டும், தீப ஒளியால் இருளை நீக்கி அன்றைய தினம் உலகமே ஜகஜ்ஜோதியாய்த் திகழ வேண்டும். விடியற்காலையில் எல்லோரும் எண்ணெய் குளியல் என்னும் கங்கா ஸ்நானம் செய்ய வேண்டும். ஒவ்வொருவருடைய இல்லத்திலும் அன்றைய தினம் குளிக்கும்



## தீபாவளி நல்வாழ்த்துகள்

''திருக்கோயில்'' இதழ் வாசகர்கள் அனைவருக்கும்
எங்கள் ஆனந்த தீபாவளித் திருநாள்
நல்வாழ்த்துகள்



நீரானது கங்கை நதியின் புனித நீராக இருந்து உலகோரின் பாபங்களைப் போக்க வேண்டும். அவர்களின் மூலம் என் பெயர் உலகம் உள்ள மட்டும் நிலைத்திருக்க வேண்டும். இதுவே நான் கேட்கும் வரம்'', என்றான்.

ஸ்ரீகிருஷ்ணரும், ''நரகாசுரா! நீ விரும்பிய வண்ணமே கங்கையின் புனிதத்துவம் அந்நாளில் நீராடும் நீரில் நிறைந்திருந்து, அன்றைய தினம் 'ஸ்நானம்' செய்பவர்கள் கங்கையில் நீராடிய புண்ணியம் கிடைக்கப்பெறுவர். உலகம் உள்ள மட்டும், உலகோர் உன் புகழ் பாடுவர், தீபங்களை வரிசையாக ஏற்றிக் கொண்டாடுவதால் 'தீபாவளி' (தீப + ஆவளி) எனப் பெயர்வழங்கப்பெறும்'', என்றார்.

இதைக் கேட்ட நரகாசுரன் மனம் மகிழ்ந்து, 'ஸ்ரீகிருஷ்ணா' என்று சொல்லிக்கொண்டு அவரின் காலடியில் உயிர் நீத்தான்.

இவ்வாறு அதர்ம இருள் அழிந்து, தர்ம ஒளி பரவிய நாளே 'தீபாவளி' ஆகும்.

நரகாசுரன் இறந்தபின் அவனுடைய மகன் 'பகதத்தனு'க்கு முடி சூட்டப்பட்டது. அமுத குண்டலங்கள் முதலான அநேக பொருள்களும் அவரவர்க்கு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சிறை மீட்கப்பட்ட பல்லாயிரம் அரச குமாரிகளும், ஸ்ரீகிருஷ்ண பகவானால் மகிழ்வான மறுவாழ்வு பெற்றார்கள்.

தீபாவளித்திருநாள் அன்றைக்கு, எங்கு பார்த்தாலும், ''கங்கா ஸ்நானம் ஆச்சா''? என்று ஒருவருக்கு ஒருவர் கேட்டுக் கொள்வது வழக்கம். இப்படிக் கேட்பதால் கங்கையின் பெயரைச் சொன்ன புண்ணியம் கிடைக்கும் என்பதும் ஆகும். அன்று சந்நியாசிகளின் கமண்டலத்தில் உள்ள நீரிலும் கங்கை நீரின் மகத்துவம் உள்ளது என்று அறிஞர்களும், பெரியோர்களும் கூறுகிறார்கள்.


நாடெங்கும் மகிழ்வோடு கொண்டாடப்படும் தீபாவளித் திருநாளில், நாமும் நமது துன்ப இருள் அகலவேண்டி, இன்ப ஒளியை ஏற்றி 'நரகாசுர விரதம்' எனும் தீபாவளித் திருநாளான இந்நோன்பை ஏற்றுச் செய்து, அநேக நன்மைகளையும், கங்கையில் நீராடிய புண்ணிய பலனையும், அடைய முடியுமாதலால் இது மிகமிக விசேஷமான புண்ணிய விரதமாகும் என்பதில் ஐயம் இல்லை...!

தீபாவளி அன்று விடியற்காலை, எண்ணெய் தேய்த்துக் கொண்டு, வெந்நீரில் மங்களகரமான கங்கா ஸ்நானம் செய்துவிட்டு, அதன்பின் காவேரியில் ஸ்நானம் செய்யும் வாய்ப்பு உள்ளவர்கள், சூரியோதயத்திற்கு முன் துலாக்காவேரி ஸ்நானம் செய்தால், (ஐப்பசி மாதத்தின் பெயர் துலாமாதம் ஆகும்) அப்படிச் செய்பவர்களைக் கண்டு நரகமும், பாபமும் நடுங்கும்! தீபாவளி அன்று முதலில் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்து விட்டு, அதன் பின் காவேரியில் நீராடுவதன் காரணம், எண்ணெய் தலையுடன் காவேரியில் நீராடுதல் பாபமாகும்; நீரோ கங்கா ஸ்வரூபம், எண்ணெயோ தெய்வீகத் தன்மையுடைய லக்ஷ்மிகரமானது; அப்பொழுது காவேரியில் மூழ்கி நீராடுபவர்களோ, அறுபத்தி ஆறு கோடி தீர்த்தங்களும் தேவாதி தேவர்களும் ஆவர்.

தீபாவளி ஆன நரக சதுர்த்தசி அன்றைய தினம் சாதாரணமாக நீராடினாலே, கங்கையில் நீராடிய புண்ணிய பலன் கிடைக்கும் என்றால், கங்கையின் மகத்துவத்தை நினைக்க நினைக்க உள்ளம் பூரித்து, உடல் சிலிர்த்து ஆனந்தப் பரவசம் அடைகிறது என்பதில் வியப்பில்லை! அதேபோல் துலாமாதத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே காவேரியில் நீராடி தம் பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றதும், துலாமாதத்தில், காவேரியில் நீராடி பல தானதர்மங்கள் செய்தால் அவற்றின் பலன் இம்மையில் மட்டுமல்லாமல், மறுமையிலும் வைகுந்தப் பதவி அடைவதோடு, அங்கும் அவனது தான தருமங்கள் துணை வந்து அவனது பாபங்களைப் போக்கும் என்பதையும் அறியலாம். ஆஹா! கங்கா! உன் மகிமையே மகிமை எனப்போற்றி வணங்குவோமாக...!!

நரகசதுர்த்தசி என்னும் தீபாவளிப் பண்டிகையை, நரகாசுரனின் மகன் 'பகதத்தனும்', ஸ்ரீகிருஷ்ணரும் கொண்டாடியதாக புராணங்கள் கூறுகின்றன.

★★★



திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளம் புல்டோசர் மூலம் தூர்வாரப்படுகின்றது. இப்பணியை மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. சம்பத் அவர்களும் மேற்பார்வையிடுகிறார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரி சங்கர், இ.ஆ.ப. அவர்களும், சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.சி., பி.எல். அவர்களும் உடன்உள்ளார்கள்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283







மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் சென்னை இணை ஆணையர் அலவலகக் கூட்ட அரங்கத்தில் 24.10.2002 அன்று நடைபெற்ற அரசு அலுவலர் அடிப்படைப் பமிற்சி (64–வது அணி) நிறைவு விழாவில் கலந்துகொண்டு ''இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆலய அறக்கட்டளை சட்ட விதிமுறைகள்'' நூலை வெளிமிட்டார்கள். இந்துசமய அறநிலையத் துறைமின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திருமிகு எம்.ஏ. கௌரி சங்கர், இ.ஆ.ப. அவர்கள் இந்நூலின் முதற் படியைப் பெற்றுச் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்து சமய அறநிலையத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் திருமிகு வி. பாண்டியன், இ.ஆ.ப. அவர்கள், கூடுதல் ஆணையர் திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி, பி.எல். அவர்கள், தலைமையிட இணை ஆணையர் திருமிகு த. சுந்தரம், பி.ஏ., பி.எல். அவர்கள், இணை ஆணையர் திருப்பணி ப. இராஜா, பி.எஸ்சி., பி.எல். அவர்கள், சென்னை இணை ஆணையர் திருமிகு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.ஸி., பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். தமிழ்நாடு நிர்வாக அதிகாரிகள் சங்கப் பொதுச் செயலாளர் திருமிகு சி. தர்மராஜ் அவர்கள் இந்நூலினைத் தொகுத்து வழங்கிமிருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.